

# மாத்வமித்திரன்.

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 4 | பிரஜோத்பத்தி ஸம்வத்ஸரம் | No 8 |
| --- | --- | --- |
| புஸ்தகம் 4 | பால்குண மாஸம் பௌர்ணமீ (22—3—32) | நெ 8 |

31 MAR 1932

பொருளடக்கம்.

| நெ. | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | மத்வமதத்தின் இரகசியங்கள். | 229 |
| 2. | ஆசாரமாலை. | 227 |
| 3. | ஓர் அத்வைதியின் அறிக்கை. | 229 |
| 4. | மைசூர் அத்வைதிகளின் கூக்குறல். | 234 |
| 5. | அத்வைதமதம் பௌத்தமதமே. | 242 |
| 6. | ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். | 235 |
| 7. | ஸ்ரீதாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 245 |
| 8. | ஸ்ரீஜகந்நாததாஸர் சரித்திரம். | 259 |
| 9. | மணிமஞ்சரி (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) | 251 |
| 10. | விஞக்களுக்கு | 253 |
| | விசேஷ தினங்கள். | 254 |
| | ...ப்புரை. | 255 |

N 32. 4. 8
(71)

ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

## SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao,*
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்.
20 டவுன்ஹால் ரோடு, மதுரை.
R. ரகூத்தமராவ் மானேஜர்

## ஏஜண்டுகள் தேவை.

மானேஜர் மாத்வமித்திரன்
ஸ்ரீவியாஸ விலாசம், கும்பகோணம்.

தந்தி விலாசம்:—கிரேயான்ஸ். 1922ல் ஸ்தாபிதம்.

சென்னைக் கவர்னர் பாராட்டிய தொழிற்சாலை எது?

## நேஷனல் கிரேயான் ஒர்க்ஸ்
கும்பகோணம்.

இதில் பாடசாலைகளுக்குவேண்டிய பலவர்ண சாக்கட்டிகள், பிலியார்டு சாக்பீஸ்கள், சாக்கட்டியில் பிளாட்டிங் பேப்பர் வெயிட்டுகள், பென்ஸாக்குகள், இந்து ஆலய விக்ரகங்கள் முதலியவை வெகு அபூர்வமாகத்தயாரிக்கப்படுகின்றன. மெடல்களும் ஸர்ட்டிபிகேட்டுகளும்பெற்றது, கவர்மெண்டாரால் ஆதரிக்கப்பெற்றது.

எங்கள்தொழிற்சாலையில் நவராத்திரியைஉத்தேசித்து ஸ்பெஷலாக ஸ்ரீகணேசர், ஸ்ரீஆஞ்சநேயஸ்வாமி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீஸரஸ்வதி முதலிய பிம்பங்கள் அழகாய் தயாரிலிருக்கின்றன. விபரம் மானேஜருக்குஒரு அணு தபால் பில்லை அனுப்பி தெரிந்து கொள்ளவும். விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.


3 MAR 1932

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्त्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## மத்வமதத்தின் இரகசியங்கள்.

(3-வது வாலியம் 258-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

மேலண்டை மூன்று வாசல்களுண்டு. முதல் வாசற்படியில் ரமாதேவி, இரண்டாம் வாசற்படியில் வாக்குக்கு அபிமானியான அபானனென்னும் பெயருள்ள அக்னியும், ப்ருத்வி என்னும் பெயருள்ள பாரதி தேவியாரும், மூன்றும் வாசற்படியில் குமுதன் குமுதாக்ஷன் என்ற த்வாரபாலகர்களிருவர்களும் இருக்கின்றனர். வடபாகத்தில் முதற்வாசற்படியில் ரமாதேவியாரும், இரண்டாவதில் மனோபிமானியான ஸமானனென்ற பெயருள்ள இந்திரனும், வித்யுத் எனப்பெயர்கொண்ட பாரதிதேவியும், மூன்றாவது வாசற்படியில் நந்தன், ஸுநந்தன் என்ற த்வாரபாலகர்களும் இருக்கின்றனர். ஊர்த்வபாகத்தில் அதாவது உபர ஓர் வாசல். அங்கு ஆகாசமெனப்பெயர்கொண்ட ரமாதேவியும், உதானனெனப்பெயர்கொண்ட வாயுபகவானும், வாக் எனப்பெயர் கொண்ட பாரதிதேவியும் இருக்கின்றனர். இந்த வாசற்படிகளில் நடுவில் பகவான் பரமாத்மா இருந்துவருகிறார். ஆகவே வைகுண்டத்தில் ஸ்ரீபாகத்திற்கு வெளிவாசல்கள் இருபத்தி எட்டு, உள்வாசல்கள் பன்னிரண்டு, ஊர்த்வ வாசல் ஒன்று ஆக நாற்பத்தி ஒன்று வாசல்களிருப்பதாய் தெரிந்துகொள்ளவேண்டும்.

முக்தி நான்குவகை ஸாயுஜ்யம், ஸாமீப்யம், ஸாலோக்யம்,

ஸாரூப்யம். பகவானுடைய அங்கத்தினின்றும் உற்பன்னர்களான பிரம்மாதி தேவர்கள் முதற்கொண்ட தத்துவாபிமானி தேவர்களுக்கு ஸாயுஜ்யம் முதலான நான்கு முக்திகளுமுண்டு. இவர்களைத்தவிர்த்துள்ள அதாத்விக தேவர்களுக்கு ஸாமீபயம் முதலான மூன்று முக்திகள்தான். அதாத்விக தேவர்களல்லாதவர்களுக்கு ஸாரூப்யம் ஸாலோக்யம் இரண்டுதான். இவர்களில் சிலருக்கு ஸாலோக்யம், சிலருக்கு ஸாரூப்யம். பகவானுடைய அங்கத்தினின்றும் எவரெவர் உண்டாயிருக்கின்றனரோ அவரவர் அந்த பரமாத்வாவின் அங்கத்தினின்றும் ஸ்வரூபாநந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்து மீண்டும் வெளிவருவதே ஸாயுஜ்யம் என்பது. சதுர்முகனுக்கு ஸர்வாங்க ஸாயுஜ்யமுண்டு. பகவானுடைய ஸமீபத்திலிருப்பது ஸாமீப்யம். அவருடன் ஒரே லோகத்தில் வசிப்பது ஸாலோக்யம். நான்கு புயங்களில் சங்கம், சக்ரம், கதை, பத்மம் இவைகளை தரித்து பீதாம்பரங்களை உடுத்திருப்பதே ஸாரூப்யமென்பது. இவ்வாறு அநந்த கல்பங்களில் முக்தர்களானவர்கள் பகவானுடைய லோகத்திலிருக்கின்றனர். இவர்களுக்கு இவர்களின் ஸ்வரூபத்தில் அணுமாத்ரமும் விருத்தியென்பதில்லை, குறைவில்லை, மீண்டும் ஸம்ஸாரத்திற்கு திரும்புதலில்லை. துக்கம், அக்ஞானம், பயம் முதலியவை இல்லை. அவர்களைவிட உத்தமர்களைக்கண்டு த்வேஷம் பொச்சரிப்பு முதலியவை அவர்களுக்கில்லை. இத்தகைய முக்தர்கள் பூபாகம் தூர்க்காபாகம் இவைகளுக்கு வந்து அவர்களின் இஷ்டப்படி ரமிக்கின்றனர்.

பிரம்மா முதல் கந்தர்வர்கள் வரையிலுள்ள தேவர்கள் எல்லோரும் மான்யர்களே. ஆனால் அவர்களில் தாரதம்மியமுண்டு, ஸாத்வீகர்கள், ராஜஸர்கள் தாமஸர்களென்று; முதலில் ஸாத்விகர்களில் ஸாத்விக தாமஸர்கள், ஸாத்விகராஜஸர்கள், ஸாத்விக ஸாத்விகர்கள் என்று. ஸாத்விக தாமஸர்கள் கந்தர்வர்கள்; ஸாத்விக ராஜஸர்கள் ரிஷிகள் முதலியோர்; ஸாத்விக ஸாத்விகர்கள். அக்னி முதலான தத்வாபிமானிதேவர்கள். ஸாத்விக ஸாத்விகர்களில் மூவகை; ஸாத்விக ஸாத்விக தாமஸர்கள், ஸாத்விக இந்திரனைத்துள்ள இதர தத்வாபிமானி தேவதைகள்; ஸாத்வீக ஸாத்விக ராஜஸன் இந்திரன், ஸாத்விக ஸாத்விக ஸாத்விகர்கள் கருடனுடைய பத்னி ஸௌபர்ணி முதலியோர். (தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி)

ஜலபாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஜலமலாதிகளைச் செய்தால் பாத்திரத்திலுள்ள ஜலம் மூத்திரத்திற்கு சமானம். அதனால் சௌசம் செய்துகொண்டால் அந்த தோஷம் நிவிர்த்தியாக சாந்திராயண விரதம் செய்யவேண்டும். மிருத்திகா சௌசம் மிகவும் அவசியம். நடைப்பாதை, புற்று, ஊஷரபூமி, எலிவளை, இவைகளிலிருந்து எடுத்த மிருத்தும் கரி, உமி, எரும்புவளை, எலும்பு, ஓடு, பெருமணல் இவைகளைக்கொண்ட மிருத்தும், உபயோகமில்லை. இதரர்கள் சேகரித்து வைத்திருக்கும் மண், ஈரமண் இவைகளும் உபயோமில்லை. குதத்தில் (மலவாயில்) 8 தடவையோ, 12 தடவையோ 16 தடவையோ 24 தடவையோ, 32 தடவையோ நாற்றம் போகுமளவும் மிருத்திகா சௌசம் செய்துகொள்ளவேண்டும். இந்த கணக்கின்படி இருக்கவேண்டுமேயல்லாது இஷ்டப்படி கூடாது. மிருத்திகா சௌசம் செய்துகொள்ளாது நாற்றம் தங்கியிருந்தால் அதை அவனுடைய பித்ருக்கள் பக்ஷிக்கவேண்டி வருகிறதென்று வியாக்ரபாதர் உறுதி கூறுகிறார். மலோத் ஸர்ஜனம் செய்தால், குறிக்கு 3, இடதுகைக்கு 10, வலது கைக்கு 7, இரண்டு கைக்கும் சேர்த்து 7, வலது பாதம் 3, இடது பாதம் 3, தடவைகள் மிருத்திகா சௌசம் செய்துகொள்ளவேண்டும். குறிக்கு 2, குதத்திற்கு 5, ஒவ்வொரு கைக்கும் 10, இரண்டு கைகளுக்கும் சேர்த்து 7, ஒவ்வொரு பாதத்திற்கும் 3, தடவை என்று மற்றொரு கணக்கை யமஸ்மிருதி அறிவிக்கிறது. மூத்ரோத்ஸர்ஜனத்திற்கு குறிக்கு 1, இரண்டு கைகளுக்கும் தனித்தனி 3, சேர்த்து 2, இரண்டு பாதங்களுக்கும் தனித்தனி 1, ஆக இந்த தடவைகளென்று விதிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி சௌசம் செய்துகொண்டு முழங்கால்கள்வரை காலைக்கழுவிக்கொள்ளவேண்டும். மலமூத்ரோஸர்ஜனமான பின் சௌச காலத்தில் முதலில் வலது காலைக்கழுவிக்கொண்டுதான் பிறகு இடது காலைக்கழுவிக்கொள்ளவேண்டும். வெளியேபோய் வீட்டிற்கு திரும்பிவந்த சமயங்களில் முதலில் இடது காலைக்கழுவிக்கொள்ளவேண்டும். பாதி சரங்கையோ கால் சரங்கையோ அதில் பாதியோ மண்ணை எடுத்துக்கொண்டு மிருத்திகா சௌசம் செய்துகொள்ளவேண்டும். முழங்கால் முழங்கை வரை ஜலத்தாலும் மிருத்திகையால் கால் கட்டி மணிக்கட்டு வரையிலும் கைகால்களுக்கு சௌசம் விதிக்கப்

பட்டிருக்கிறது. ரேதஸ்ஸூ உத்ஸர்ஜனம் செய்தால் மூத்ரோத்ஸர்ஜன காலத்தில் விதிக்கப்பட்டுள்ள சௌசத்திற்கு இரண்டு மடங்காய் சௌசம் செய்து கொள்ளவேண்டும். இது கிருஹஸ்தாசிரமிக்கு ஏற்பட்ட சௌசம். பிரம்மசாரிகளுக்கு இதற்கு இரண்டுமடங்கும், வானப்ரஸ்தனுக்கு மூன்றுமடங்கும், ஸந்யாஸிகளுக்கு நான்கு மடங்கும் விதிக்கப்பட்டிருக்கிறது. இரவிலும் ஆபத்காலத்திலும் மேற்கண்ட கணக்குக்கு பாதிமடங்கு செய்தாற்போதும். உபாதிகாலத்தில் அதில் பாதிதான். வழியில் நடந்து போகும்பொழுது அதில் பாதி. ஆகவே தன்னுடைய ஊரில் ஆசாரத்தை பூர்ணமாயும், இதர ஊர்களில் அதில் பாதியாகவும், பெரிய பட்டிணங்களில் கால்பாக ஆசாரமும், வழியில் சூத்ரனைப்போலும், ஆசாரம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மணன் போஜனம் செய்யும்பொழுது மலோத்ஸர்ஜனம் மூத்ரோத்ஸர்ஜனம் இவைகளின் சப்தம் காதிற்பட்டால் உடனே அந்த கபளத்தை தரையில் போட்டுவிட்டு அந்த இலையை விட்டெழுந்து ஸ்நானம் செய்தால் சுத்தி. அந்த கபளத்தை பக்ஷித்தால் ஒருநாள் முழுமையும் பட்டிணியிருந்தால் சுத்தி. எல்லா அன்னத்தையும் பக்ஷித்தால் மூன்றுநாள் பட்டிணியிருந்தால் சுத்தியென்று வியாஸஸ்மிருதி கூறுகிறது. மூத்ரோத்ஸர்ஜனம் செய்தால் நான்கு தடவையும், மலோத்ஸர்ஜனம் செய்தால் 8 தடவையும், போஜனமானபின் 12 தடவையும், ரேதோத்ஸர்ஜனமானபின் 16 தடவையும் வெளியேபோய் வந்தால் 4 தடவையும் வாய் கொப்பளிக்கவேண்டும். அப்பொழுதுதான்சுத்தி. ஸ்திரீகளுக்கு சௌசம் இம்மாதிரிதான். விதவைகளுக்கு 'ஸந்யாஸிகளைப்போல் இதற்கு நான்கு மடங்கு. பிரம்மாசாரிக்கு 2 மடங்கு, வானப்ரஸ்தனுக்கு 3 மடங்கு; சரீரத்தில் நாபிக்குமேல்பாகத்திலுள்ள , அவயவங்கள் பரிசுத்தமானவைகளென்றும் அதன்கீழ் புறத்திலுள்ள அவயவங்கள் அசுத்தமானவைகளென்றும் மனுதர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதராளின் கேசம், ரேதஸ்ஸூ, சீ, ரக்தம், அமேத்யம், மூத்திரம், காதின் அழுக்கு, கண்ஜலம், நகம், கபம், கண்புளிச்சை, வேர்வை இவைகளைத்தொட்டால் மிருத்திகை ஜலம் இவைகளால் அந்த அங்கத்தை சௌசம் செய்துகொண்டு ஸ்நானம் செய்து ஆசமனம் செய்யவேண்டும். தன்னுடையதையே இவன் தொட்டால் மார்ஜனம் செய்துகொண்டால் சுத்தி. தன்னுடைய மலத்தைப் பார்க்கக்கூடாது. அப்படிப்பார்த்துவிட்டால் சூரியன், பசு, பிராம்மணன் இவர்களை தரிசித்தால் சுத்தி. தாம்பரம் முதலியவைகளால் செய்த பாத்திரங்களுக்கு ஜலமல ஸம்மந்தம் ஏற்பட்டால் அதன் நாற்றம் போகுமளவும் மிருத்து, ஜலத்தால் கழுவி புளி சாம்பல் இவைகளாற் தேய்த்தால் சுத்தி. மண்பாண்டமானால் எரிந்துவிடவேண்டியதுதான்.

(தொடரும்.)



# மத்வமதத்தில்சேற

## அநேக அத்வைதிகள் தயார்

### ஓர் அத்வைதியின் அறிக்கை.

இப்பாரத நாட்டிலுள்ள பத்தொன்பது அத்வைத மடாதிபதிகளுக்கும் மகாமகோபாத்யாயம் முதலிய பட்டங்களை வகித்துக்கொண்டிருக்கும் அத்வைத பண்டிதர்களுக்கும் மற்றும் எல்லா அத்வைத மதாபிமானிகளுக்கும் வணக்கத்துடன் நான் செய்துகொள்ளும் விக்ஞாபனமாவது:—

“அத்வைதமதம் அவைதிகர்களான சூன்யவாதி பௌத்தர்களின் மதம்; அப்படியே விக்ஞானவாதி பௌத்தர்களின் மதம்; சங்கராசாரியார் முதலான அத்வைதிகள் இந்த பௌத்த மதங்களை கண்டனம் செய்யும் சாக்கிட்டு தம்முடைய மதத்தையே கண்டனம் செய்துகொண்டிருக்கிறார். இவ்வாறு தாங்களே தங்கள் மதத்தை கண்டனம் செய்துகொண்டிருப்பதால் சங்கராசாரியார் முன்பின் விரோதமாய் பேசுகிறவர்” என்று ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகள் தேசதேசங்களில் உபன்யாசம் செய்துகொண்டு இந்த உபன்யாசங்களை அந்தந்த தேச பாஷைகளில் அச்சிட்டு பிரசுரம் செய்துவருகின்றனர்.

இதைத்விர “தத்வமஸி முகலான நாலைந்து வேதவாக்யங்களையும் வேதார்த்ததங்களை நிர்ணயிக்கும் ஒன்றிரண்டு பிரம்மஸூத்ரங்களையும் ஒன்றிரண்டு கீதா சுலோகங்களையும் தவிர்த்து மற்ற எல்லா வேதங்கள், பிரம்மஸூத்ரங்கள், பகவத்கீதை. ஆகிய ப்ரஸ்தானத்ரயங்கள், ஜீவன் ஈசுவரன் இவர்களில் பேதத்தையே அறிவிக்கின்றனவென்று சங்கராசாரியார் † முதலான

பத்திராதிபரின் குறிப்பு.

† “அஹம் பிரம்மாஸ்மி, தத்வமஸி இத்யாதி உபநிஷத்துகள் ஜீவேசுவர அபேதத்தைத் தான் சொல்லுகின்றன வென்றால் ஸ்வார்த்த விகாதமாகிறது. மேலும் இவைகளைத்தவிர்த்துள்ள யஆத் மணிதிஷ்டன்,

அத்வைதிகளே எழுதியிருக்கின்றனர்; போதாக்குறைக்கு அத்வைதத்திற்கு முக்ய ஆதாரமென்று சொல்லப்படுகிற தத்வமஸி முதலான வாக்யங்கள் முக்ய விருத்தியால் அத்வைதத்தை போதிப்பதில்லை; இந்த வாக்யங்களிலும் அநேக வாக்யங்கள் ஜீவப்ரம்மபேதத்தைத்தான் சொல்லுகின்றனவென்று சங்கராசாரியார் ‡ முதலான அத்வைதிகளே ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.; மேலும் அத்வைதத்தை போதிப்பதாய் கருதப்பட்டிருக்கும் இரண்டு மூன்று பிரம்ம ஸூத்திரங்களிலேயும் § அபேதத்தை போதிப்பதாயுள்ள பதமே இல்லை; ஆனால் பேதத்தை போதிக்கும் பதம்தானிருக்கிறது; க்ஷேத்திரக்ஞம் சாபிமாம் வித்தி என்னும் ஒன்றிரண்டு கீதா சுலோகங்களும் அபேதத்தைச் சொல்வதில்லையென்று சங்கராசாரியாரே அறிவித்திருக்கிறார்” என்றும் “தத்வமஸி முதலான வாக்யங்கள் ஜீவப்ரம்ம அபேதத்தையோ ஜகத்துக்கு மித்யாத்வத்தையோ அறிவித்துக்காட்டுகிறதில்லை” என்று உபன்யாசம் செய்துகொண்டு பிரசித்தம் செய்துவருகிறார். மைசூரிலிருந்துவரும் மகாமகோபாத்யாயம் முதலான அநேக பட்டங்களை தரித்துக்கொண்டிருக்கும் அத்வைத வித்வான்கள், இப்பாதநாட்டிலுள்ள பத்தொன்பது அத்வைத மடாதிபதிகள் “அத்வைதமதம் அவைதிகமதமென்று ஒப்புக்கொள்வீர்களா அல்லது வைதிக மதமென்று ஸ்தாபிக்க அறிவீர்களா? ஸ்தாபிப்பீர்களானால் அதற்கு தங்கள் ஏற்பாடு என்ன? என்பதை கூடிய சீக்கிரம் உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென பிரார்த்தித்துக்கொண்டதும் அப்படியே இந்த விஷயத்தை பாதகண்டத்திலுள்ள எல்லா அத்வைத பண்டிதர்களுக்கும் அறிவித்துவிடவேண்டுமென்று நிச்சயித்ததும் இத்துடன் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் 22–9–30உ யில் நடந்த மகாநாட்டின் தீர்மானங்களால் வெளியாகியிருக்கிறது. மேலும் இந்த விஷயம் 3, 4 மாதங்களுக்கு முன் கும்பகோணம் சங்கராசாரியார் மட சகாயத்தினின்றும் பிரசுரமாகும் ஆரியதர்மம் பத்திரிகையில் அச்சிட்டு பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஆகியும் பத்தொன்பது அத்வைதி மடாதிபதிகளோ மகாமகோபாத்யாயம் முதலான அநேக பட்டங்களை வைத்துக்கொண்டிருக்கும் அத்வைத பண்டிதர்களோ, அத்வைதமதத்திற்கும் பௌத்தமதத்திற்கும் பேதத்தையாவது, ஞானத்தைத்தவிர ஜகத்து இல்லை என்னும் விஷயத்தில் பௌத்தர்களின்மீது அவர்கள் (அத்வைதிகள்) சுமத்திய தூஷணைகள் ஞானத்தைத்தவிர ஜகத்து இல்லை என்று சொல்லும் அவர்களின் (அத்வைதிகளின்) மதத்தின் மீது ஏற்படுவதில்லை என்பதையாவது, “பிரம்மஸத்யம் ஜகந் மித்யா ஜீவோ பிரம்மைவ நாபர:” என்று அவர்களின் மதத்தில்

---

பராத்பரம் புருஷமுபைதி, ததேதத்ஸத்யம் இத்யாதிஸமஸ்த உபநிஷத்துகளாலும் ப்ரதிபாதிக்கப்படும் ஜீவேசுவரபேதம், ஜகத் ஸத்யத்வம், சிருஷ்டி இத்யாதிரூபமான அர்த்தங்களுக்கு விருத்தமாகிறது. இதுமட்டிலுமல்லாமல் பேதத்தையே அறிவிக்கும் எல்லா கர்மகாண்டங்களுக்கும் ப்ராமாண்யம் கெட்டுப்போகிறது. மேலும் ஜீவேசுவர பேதத்தை ஸம்சயமின்றி அறிவிக்கும் ப்ரத்யக்ஷம் அனுமானம் இவைகளுக்கும் விருத்தமாகிறது. ஆகவே இந்த தத்வமஸி முதலான வாக்யங்களுக்கு அப்ராமாண்யத்தையாவது பேதரூபமான வேறு அர்த்தத்தையாவது சொல்லவேண்டுமேயல்லாது ஜீவ ஈசுவர அபேதபரமாய் இருப்பதாய் சொல்லக்கூடாது.” இது பூர்வபக்ஷ வாக்யமாய் இருப்பினும் சித்தாந்தத்தில் இதை மாற்றிக்கொள்ளவில்லை என்பதை அறியவும். (பிருஹதாரண்யஉபநிஷத் சங்கரபாஷ்யம் 2–1–20)

‡ “விருத்ததர்மாக்ரந்தத்வாத் பரஸ்பர விலக்ஷணௌ / ஜீவேசௌ வஹ்னி துஹினாவிவ சப்தார்த்தோபிச / ப்ரத்யக்ஷாதி விரோத: ஸ்யாத்” என்று ஸர்வவேதாந்த ஸித்தாந்த ஸாரஸங்கிரஹத்திலேயும் “ஐக்யம் தயோர் லக்ஷிதயோ: நவாச்யயோ: நிகத்யதேன்யோன்ய விருத்ததர்மிணோ:” என்று விவேகசூடாமணியிலேயும் சங்கராசாரியார் சொல்லியுள்ளார்.

§ “ஜீவேசுவரர்களுக்கு ஐக்யத்தை ஸூத்ரகாரர் எங்கேயும் வாய்விட்டு சொல்லவில்லை; மேலும் எல்லா சூத்திரங்களிலேயும் பேதத்தைதான் சொல்லியுள்ளார். ஆகையால் ஜீவேசுவர ஐக்யம் சூத்ரகாரருக்கு ஸம்மதமில்லை” என்று ஆக்ஷேபித்துக்கொண்டு “சாஸ்திரத்துக்கு உத்தேச்யமான ஜீவப்ரம்ம ஐக்யத்தை சாஸ்திர திருஷ்ட்யாதுபதேசோவாமதேவவத், ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச, என்னும் சூத்திரங்களால் அறிவித்திருக்கிறார்” என்று சங்கராசாரியார் சொல்லியுள்ளார். இதனால் 564 சூத்திரங்களில் 2 ஸூத்ரங்கள்தான் அபேதபரமென்றும் மற்றவையெல்லாம் பேதபரமென்றும் அவரே ஒப்புக்கொண்டதாய் ஏற்படுகிறது.

சொல்லியிருக்கிறபடி ஜகத்மித்யை என்றால் ஞானம் (பிரம்மம்) இதைத்தவிர்த்து இல்லை என்னும் விஷயத்திலாவது, ப்ரஸ்தான த்ரயங்களாகிய (வேதம் சூத்திரம் கீதை) பிரமாணங்களைச் சொல்லி அவர்களின் மதத்தை ஸ்தாபிக்காமலிருந்து வருவதை கண்டு ஸ்ரீ உத்தராதிமடத்தின் ஸ்வாமிகள் சொல்லிவருவது உண்மையென்றும் நியாயமென்றும் தோன்றுகிறது. இந்த நிச்சயத்தாலேயே பாகல்கோட்டையிலிருந்துவரும் ஸாவுகாரும், பாங்கருமான ஸ்ரீமான் ராமண்ணா அவர்கள், கிரிகாம் ஜாகீர்தார் ஸ்ரீமான் ஸ்ரீபாதசாஸ்திரிகள், மைசூரிலிருந்துவரும் ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A., முதலியோர் வெகுகாலம் யோசித்து அத்வைதமதத்தை உதறித்தள்ளி துவைதமதத்தை ஆசிரயித்திருக்கின்றனர். தற்போது இதேமாதம் 15, 20 நாட்களுக்கு முன் ஸ்ரீமான் ராமச்சந்திரமூர்த்தி (B.A., Hons.) பச்சையப்பன் காலேஜ் மாணவர் பலநாள் யோசித்து அத்வைதமதத்தை விட்டொழித்து துவைதமதத்தையே ஆசிரயித்திருக்கிறார்.

இன்னமும் அனேக அத்வைதிகளுக்கு அத்வைத மதத்தில் தம் மதத்தின் விசுவாசம் நாளடைவில் குறைந்துவந்து துவைதமதத்தில் பற்றுதலுண்டாகி அவர்கள் அத்வைத மதத்திலிருந்து விட்டு விலக தயாராகயிருக்கின்றனர். ஆகையால் நீங்கள் சீக்கிரமே "அத்வைதமதம் வைதிகமதம், அவைதிகமான பௌத்த மதமன்று, ஜகத்மித்யை, ஞானத்தைத்தவிர்த்து இல்லை என்னும் விஷயத்தில் பௌத்தர்களின்மீது சொல்லிய தூஷணம் க்ஞானவ்யதிரிக்தமாய் ஜகத்து இல்லையென்று கூறும் எங்கள் அத்வைத மதத்தின்மீது ஏற்படுவதில்லை, ஜீவோப்ரம்மைவ நாபர: ஜீவன் பிரம்மமே என்ற எங்கள் அத்வைத மதத்திற்கு வேதாதி பிரமாணங்கள் உண்டு, எங்கள்மதம் பௌத்தமதமன்று" என்று சாதித்துக்கொடுக்க தங்களால் முடியுமானால் துவைதிகளுக்கு நோட்டீஸ் கொடுத்து, 'ஸபையைக்கூட்டி, அந்த ஸபையில் அத்வைதமதம் வைதிகமதமென்று ஸ்தாபித்து, ஸபையில் நிகழ்ந்த வாதிப்ரதிவாதிகளின் வினாவிடைகளை ஸபையோர்களின் கையெழுத்து வாங்கி அதனுடன் அந்தந்ததேச பாஷைகளில் அச்சிட்டு பிரசுரம் செய்து எங்கள் ஸம்சயங்களைப்போக்கி நாங்களெல்லோரும் அத்வைத மதத்திலேயே இருக்கும்படி செய்ய வேண்டுமாய் ப்ரார்த்திக்கும்,

S. R. சர்மா

அத்வைத மதாபிமானி,

20—1—32



# மைசூர் அத்வைதிகளின் கூக்குரல்.

1. மைசூர் ராஜதானியிலுள்ள ஸ்ரீமத் அபிநவ சங்கராலயத்தில் 22–9–30ல் பிராம்மணர்களின் சபையொன்று கூட்ட வேண்டுமென்று பிரம்மஸ்ரீ வேதரத்னம் வைதிகசிகாமணி அய்யா கனபாடிகள் 1, இனாம்தாரும் டிஸ்டிரிக்ட் போர்ட் மெம்பருமான M. K. கிருஷ்ணராயர் 2. பிரம்மஸ்ரீ பண்டித சதாசிவ சாஸ்திரி 3. ஆஸ்தான மகாவித்வான் பிரம்மஸ்ரீ மோடஹள்ளி ராமசேஷசாஸ்திரி 4. மகா-ரா-ரா ஸ்ரீ நஞ்சன்கூடு V. ரங்கண்ணா 5. மகா-ரா-ரா-ஸ்ரீ M. வெங்கடகிருஷ்ணய்யர் 6. இவர்களின்கையொப்பமிட்ட பத்திரிகைகள் 18–9–30 உயன்று வெளியிடப்பட்டன.

2. இதற்கிணங்கி கூடிய ஸபையில் ஆஸ்தான மகா வித்வான் பிரம்மஸ்ரீ M. ராமசேஷசாஸ்திரி பிரேரிபித்து ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீகளான கானஹள்ளி நாராயண சாஸ்திரிகள் முதலியவர்கள் ஆமோதித்து பிரம்மஸ்ரீ வேதரத்னவைதிகசிகாமணி அய்யா கனபாடிகள் ஸபாத்யக்ஷராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3. ஸபாத்யக்ஷருடைய ஆக்ஞையின் கீழ் நஞ்சன்கூடு மகா-ரா-ரா-ஸ்ரீ V. ரங்கண்ணா தனக்கும் ஸ்ரீஉத்தராதி மடத்தின் ஸ்வாமிகள் அவர்களுக்கும் நடந்த அத்வைதமதம் அவைதிகம் என்றது முதலானதுபோலுள்ள விஷயங்கள் அடங்கிய கடிதங்களை ஸபையில் வாசித்தார்.

* * * *

4. பிறகு ஸபையில் ஸபாத்யக்ஷரின் பிரேரணையின்பேரில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

* * * *

2. இதனால் நமக்கு உண்டாயிருக்கும் மனோவேகத்தை பாரதகண்டத்தில் எல்லா பிரதேசங்களிலும் உள்ள அத்வைத பண்டிதர்களின் மூலமாய் ஆங்காங்குள்ள மகாஜனங்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமென்றும்.

3. பரதகண்டத்திலுள்ள 19 அத்வைத மடாதிபதிகளுக்கு அத்வைதம் அவைதிகமென்பதை ஒப்புவீர்களா? வைதிகமென்று ஸ்தாபிக்க முடியுமா? அப்படி முடியுமானல் ஸ்தாபிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யவேண்டியது என்று பிரார்த்தனை அனுப்பி சீக்கிரத்தில் உத்திரவு ஆகவேண்டுமென்றும்.

4. இந்த மேற்கண்ட தீர்மானங்களை அவசியமான இதர பாஷைகளிலும் மொழிபெயர்த்து அந்தந்த பாஷையில் அச்சிட்டு பிரசுரம் செய்யப்படவேண்டுமென்றும்.

5. மேற்கண்ட தீர்மானங்களின்படி காரியங்களை நடத்த கீழ்கண்டவர்களை காரியதரிசிகளாகவும் ஏற்படுத்தி ஸந்தர்ப்பத்துக்கேற்றவாறு உபஸபை மெம்பர்களின் கூட்டத்தை ஜாஸ்தியோ கம்மியோ பண்ண இந்த ஸபைக்கு அதிகாரம் உண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது. "ஸபாத்யக்ஷர், பிரம்மஸ்ரீ வேதரத்ன வைதிகசிகாமணி அய்யா கனபாடிகள். காரியதரிசிகள். ஸ்ரீமான்களான அட்வொகேட் பாலஹள்ளி ஸீதாராமய்யரவர்கள் நஞ்சன்கூடு, V. ரங்கண்ணு. மெம்பர்கள். பிரம்மஸ்ரீகளான மகாமகோபாத்யாயம் தர்மாதிகாரி விருபாக்ஷ சாஸ்திரிகள், ஆஸ்தான வித்வான் மோடகான ஹள்ளி ராமசேஷசாஸ்திரிகள் B. வெங்கட்டராமசாஸ்திரிகள், கன்னம்பாடி கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள், கானகான ஹள்ளி நாராயண சாஸ்திரிகள், ஆஸ்தான வித்வான் சதாசிவ சாஸ்திரிகள், சாம்ப சாஸ்திரிகள், ஸ்ரீமான்களான M. வெங்கடகிருஷ்ணய்யர், அட்வொகெட் C. நரஸிம்மய்யர், B.A.,B.L., டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும் இனும்தாருமான M. K. கிருஷ்ணராவ்.

மைசூர், 22–9–30.

(ஒ) அய்யாகனபாடி,
ஸபாத்யக்ஷர்.

[இந்த அறிக்கை கன்னடத்தில் அச்சாகி மைசூர்மாகாணத்தில் ஏராளமாய் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் அறிவித்திருக்கிறபடி அத்வைத மதத்தின்மீது ஸ்ரீஉத்தராதிமடத்தின் ஸ்வாமிகள் ஸ்ரீஸத்யதியானதீர்த்த ஸ்ரீபாதாள் கிளப்பியிருக்கும் ஆக்ஷேபணைகளுக்கு அத்வைதிகள் சரியானபடி ஸமாதானம் கூறாமல் எமது



ப்ராசீன க்ரந்தகாரர்களால் பலநூல்களில் சதச: கண்டிக்கப்பட்டுப்போன துச்சமான அத்வைதிகளின் பழைய அத்தப்பாட்டி கதைகளையே தற்போது அத்வைதமதத்தில் வெகு விரைவாய் நம்பிக்கை இழந்துவரும் அம்மதத்தினர்கள் மத்வமதத்தில் சேர்ந்துவிடாமலிருக்க தடைசெய்யவோ அல்லது சாமானியர்களை ஏமாற்றவோ ஸ்ரீமத்வாசாரியாரை கண்டபடி எல்லாம் தூஷித்து அந்த தூஷணைகளுடன் இப்பால் சென்ற மூன்று மாதமாலமாய் அத்வைதிகளின் ஆரியதர்மம்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுவருகின்றன. அப்பிதற்றலுக்கு தனியாய் பதிற்கூறுவது அனவசியம் என்று பலர் எண்ணியிருப்பினும் சிலர் சரியானபடி வாய்பூட்டுபோட ஸந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அத்வைதிகளிலேயே அறிவாளிகள் இப்பால் விழித்தெழுந்து இவர்களின் சூழ்ச்சிகளுக்கெல்லாம் மயங்காமல் ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் கிளப்பியிருக்கும் ஆணித்தரமான ஆக்ஷேபணைகளுக்கு சமாதானம் அத்வைதமதத்தில் ஏதாவது உண்டா என்று கேட்டறிய மேற்கண்ட அறிக்கை முதலியவைகளின் மூலமாய் வற்புறுத்துவதும் ஸமாதானம் கிடைக்காவிடில் அவைதிகமானதும் அஸுரர்களுடையதுமான அத்வைதமதத்தை உதறித்தள்ளி வைதிகமானதும் ஸ்ரீகிருஷ்ணனால் பிரேரிபிக்கப்பட்டிருப்பதுமான மத்வமதத்தில் சேருவதும் உசிதமேயாகும். ப—ர்.]

# அத்வைதமதம் பௌத்தமதமே.

---

பௌத்த மதத்தார்களில் ஓர் வகுப்பாராகிய விக்ஞானவாதிகள் என்பார் "விக்ஞானமொன்றே தத்வம், அதில் அறிகிறவன் அறியப்படுகிறவன் (க்ஞாத்ருக்ஞேய) முதலான பிரபஞ்சம் கல்பிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லி ஞானத்தை தவிர்த்துள்ள வஸ்துக்களை நிராகரித்திருக்கின்றனர். அதுவே அவர்களுடைய மதமாகும். அப்படியே அவர்களில் மற்றொரு வகுப்பாரான சூன்யவாதிகளென்பார் "சூன்யமொன்றே தத்வம், அந்த சூன்யத்தில்தான் அறியப்படுகிறவன், அறிகிறவன் முதலான பிரபஞ்

சம் கல்பிக்கப்பட்டிருக்கிற" தென்று சொல்லி பதார்த்தங்களை நிராகரித்திருக்கின்றனர். இது சூன்யவாதி பௌத்தர்களின் மதம். சங்கராசாரியார் வெளியிட்டிருக்கும் அத்வைத மதத்தில் மேற்கண்ட இரண்டு பௌத்த மதங்களின் கொள்கையைத்தான் கைக்கொண்டிருக்கிறார். பெயரைமட்டில் மாற்றிக்கொண்டு பிரம்மத்தினிடத்தில் அறிகிறவன், அறியப்படுகிறவன் முதலான ஸமஸ்த பிரபஞ்சம் கல்பிதம், பிரம்மமொன்றே தத்வமென்று சொல்லி பிரம்மத்தைத்தவிர வேறு பதார்த்தமே இல்லையென்று பாஹ்யார்த்தங்களை நிராகரித்திருக்கிறார். ஆகவே விக்ஞான வாதி பௌத்தர்களின் விக்ஞானமும், சூன்யவாதி பௌத்தர்களின் சூன்யமும், அத்வைதிகளின் பிரம்மமும், ஒன்றுதானென்று தெளிவாய் ஏற்படுகிறது.

இதைக்கொண்டுதான் சங்கராசாரியாரின் காலத்திலேயே அப்போதிருந்த வைதிகர்கள் அவைதிகமான பௌத்தமதத்தைத்தான் வெளியிட்டிருக்கிறாராதலால் சங்கராசாரியார் பௌத்தரென்றுதான் நிச்சயித்து இவர் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கத் தகுந்தவரல்லவென்று தடுத்துவிட்டதாயும் நான் பௌத்தனல்ல என்று சங்கராசாரியார் சொல்ல, பௌத்தமதத்திற்கும் உங்கள் மதத்திற்கும் வித்யாசம்தான் என்ன உண்டு என்று அவர்கள் கேட்டதாயும், அப்போது சங்கராசாரியார் விக்ஞானவாதியான பௌத்தன் க்ஷணிகமென்று சொல்லுகிறான்; நானோ விக்ஞானமாகிய பிரம்மத்தை நித்யமென்கிறேன் என்று சமாதானம் சொன்னதாயும், சங்கரவிஜயம் பதினைந்தாவது ஸர்க்கத்தால் தெரியவருகிறது. உண்மையைப்பார்க்குமிடத்தில் பௌத்தர்களிலும் ஓர் வகுப்பார் விக்ஞானத்தை நித்யமென்று கூறுகின்றனர். அவர்களுக்கு நித்யவிக்ஞான வாதிகளென்று பெயர். அந்த நித்ய விக்ஞானவாதி பௌத்தர்களுக்கும் அத்வைதிகளுக்கும் சங்கராசாரியார் சொன்னபேதம் இல்லையென்றே ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

சங்கராசாரியாரின் பரமகுருவான கௌடபாதாசாரியாரை இது ஸம்மந்தமாய் ஆக்ஷேபித்ததற்கு அத்வைதாசாரியாரான அவரே "ஞானமொன்றே ஸத்யம், அந்த ஞானத்தில்தான் க்ஞாத்ருக்



ஞேயாதி ப்ரபஞ்சம் கல்பிதம், பாஹ்யபதார்த்தங்கள் இல்லவே இல்லையென்று நாம் விக்ஞானவாதிகளான பௌத்தர்களைப் போலவேதான் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் சொல்லும் ஞானம் உபநிஷத்துக்களால்தான் அறியப்பட அருகமானது, எல்லா பேதமுமில்லாதது, நித்யமானது, பௌத்தர்கள் கூறும் விக்ஞானமோ அப்பேர்பட்டதல்ல" வென்று கூறியதாய் அவருடைய நூலிலிருந்து (ஆ. கௌ. அ. 99.) தெரியவருகிறது. அத்வைதிகளின் விக்ஞானமும் சரியே, பௌத்தர்களின் விக்ஞானமும் சரியே, இவை இரண்டும் நிர் விசேஷமாயும் அதாவது எந்த தர்மமும் அதற்கில்லாமலும் பேதரகிதமாயுமிருப்பதன் நிமித்தம் க்ஷணிகத்வதர்மமோ அல்லது நித்யத்வதர்மமோ ஏற்படாதாதலால் இந்த இரண்டு மதங்களின் விக்ஞானத்திற்கும் பேதமிருப்பதாய் சொல்ல எவ்வாறு முடியும்? அத்வைதிகளின் பிரம்மம் நிர்தர்மிகனும் அவாச்யனும் அக்ஞேயனுமாயிருக்கும்பொழுது அது உபநிஷத்துக்களால் அறியப்பட அருகமென்று கௌடபாதர் சொன்னதும் பொருந்தாது. இதனால் விக்ஞானவாதி பௌத்தர்களின் மதமும் அத்வைதமதமும் ஒன்றென்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

சூன்யவாதி பௌத்தர்களின் மதமும் அத்வைதமதமும் ஒன்றுதானென்று அத்வைதிகளே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பிரம்மவித்யாபரணகாரர் க்ஷணிகத்வாச்ச என்னும் ஸூத்ரவ்யாக்யான சந்தர்ப்பத்தில் "சூன்யமென்னும் பதத்தால் ஸர்வ பிரபஞ்ச அதீதமான பாவரூபமாயுள்ள தத்வம் சொல்லப்படுகிறதென்று பௌத்தர்கள் அபிப்பிராயப்படுவதாக இருந்தால் அத்வைதிகளாகிய எங்களுடைய பிரம்ம வாதத்தைததான் வேறு பெயரைக்கொண்டு சூன்யமென்ற பதத்தால் அவர்கள் சொன்னதாய் ஆகிறது. சூன்யமென்ற பதத்தால் பிரபஞ்சத்தின் அபாவரூபமான தத்வம் கருதப்பட்டால் பிரபஞ்சம் எல்லா பிரமாணங்களாலும் சித்திப்பதால் பிரபஞ்சத்தின் அபாவம் தத்வமென்று நிரூபிப்பது முடியாது" என்று சொல்லியுள்ளார். (பிரம்மவித்யாபரணம் 2-2-39) இதனால் சூன்யவாதமும்

அத்வைத பிரம்மவாதமும் ஒன்றே என்று அத்வைதிகளே ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொண்டிருக்கின்றனரென்று தெரியவருகிறது.

இப்படியிருக்க சங்கராசாரியார் பௌத்தமதத்தை பிரமாதமாய் கண்டித்திருக்கிறார். பௌத்தமதத்தின்மீது இவர் சொன்ன தூஷணைகளெல்லாம் இவருடைய அத்வைதமதத்தின்மீதே சுமந்து அவருடைய மதத்தையே அவர் கண்டித்துக்கொண்டதாயாகிறது. எப்படி எனில் விக்ஞானவாதிகள் "விக்ஞானத்தைத் தவிற பாஹ்யமான பிரபஞ்சமே இல்லை; க்ஞாத்ருக்ஞேயாதி எல்லா பிரபஞ்சமும் விக்ஞானத்தில் கல்பிதமானது" என்று சொன்னதை மூன்றுவகையாய் விகல்பம் செய்து சங்கராசாரியார் கண்டித்தார். 1. "கடம், படம், ஸ்தம்பம், குட்யம் முதலிய பதார்த்தங்கள் கண்ணுக்கு தென்பட்டுக்கொண்டிருக்கையிலேயே அவைகள் இல்லையென்று சொல்லமுடியாது. ஒருவன் போஜனம்செய்து போஜனத்தால் ஏற்பட்ட திருப்தியை அனுபவித்திருக்கையில் நான் போஜனம் செய்யவில்லை, என்க்கு திருபதி ஏற்படவில்லை, என்று சொல்வானேயானால் அவனுடைய வார்த்தை எவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்லவோ அவ்வாறே இந்திரியங்களால் வெளியே காணப்படும் பிரபஞ்சத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் நான் பாஹ்ய பிரபஞ்சத்தை பாக்கவில்லை, பாஹ்ய பிரபஞ்சமேயில்லை, என்று சொல்லும் விக்ஞானவாதிகளின் மதம் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்ல" வென்றார். 2. "எந்த பதார்த்தத்தையும் நாம் பார்ப்பதில்லை என்று நாம் சொல்வதில்லை, ஞானத்தால் தனியாக அது காணப்படுவதில்லை" என்று பௌத்தர்கள் அதற்குமேல் சொன்னால் அதையும் கண்டித்தார். 'உங்கள் வாயை சரியாய் அடக்குவாரில்லாததால் இவ்வாறு பேசுகிறீர்கள். இந்த உங்கள் வார்த்தைகள் யுக்தி விருத்தங்களாயிருக்கின்றன. எவரும் ஞானத்தையே கடம், படம் முதலியவைகளாய் அறிவதில்லை. ஆனால் கடம் படம் முதலியவைகள் ஞானத்திற்கு விஷயங்களென்றுதான் அறிவார்கள். இவ்வாறு கடம் படம் முதலிய பதார்த்தங்கள் ஞானத்திற்கு பின்னமாய் அறியப்பட்டு வரும்பொழுது ஞானத்தைத்தவிற பதார்த்தங்களில்லவே இல்லை



என்று சொல்லுவது சரியன்று. என்று கண்டித்தார். 3. "பாஹ்யமான பதார்த்தங்களில்லாமலேயே ஸ்வப்னத்தின் அனுபவங்கள் உண்டாகிறதல்லவா; அதைப்போல் விழித்திருக்கும் சமயத்தில் ஏற்படும் அனுபவங்கள் அனுபவங்களாகவே இருப்பதன்நிமித்தம் பாஹ்யபதார்த்தங்களில்லாமலேயே உண்டாகின்றன" என்று பௌத்தர்கள் அதன்மீது கக்ஷி சொல்ல "ஸ்வப்னத்தின் அனுபவத்திற்கும் பாதை (பாதகம்) உண்டு; விழித்தகாலத்திலுண்டாயிருக்கும் அனுபவத்திற்கு எந்த அவஸ்தையிலும் பாதை இல்லை; ஆகையால் ஸ்வப்னத்தின் அனுபவம்போல் ஜாக்ரத் அனுபவங்கள் பாஹ்யபதார்த்தங்களில்லாமல் ஏற்படாது" என்று இவ்வாறு விக்ஞானவாதி பௌத்தர்களைக்கண்டிக்கப்போய் விக்ஞானவாதிகளைப்போலவே விக்ஞானத்தைத்தவிர்த்து பாஹ்ய பதார்த்தங்களில்லை என்று சொல்லும் தம்முடைய மதத்தைக்கண்டித்துக்கொண்டிருக்கிறார். "சூன்யம் பிரபஞ்ச அபாவரூபமென்பது ஸர்வபிரமாணங்களுக்கும் விருத்தமானதால் அது சரி அன்று; ஸர்வபிரமாணங்களாலும் பிரபஞ்சம் காணப்படும்பொழுது அதன் அபாவம் (அது இல்லையென்று) சொல்வது முடியாதென்று ஸ்பஷ்டமானதால் சூத்ரகாரர் அந்தமதத்தைக் கண்டிக்கவில்லை" என்று சங்கராசாரியார் சொல்லியிருக்கிறார். அத்வைதமதத்தில் "பிரம்மம் பிரபஞ்ச அபாவரூபம்" என்று அத்வைதஸித்தி முதலிய நூல்களில் சொல்லப்பட்டிருப்பதால் "சூன்யம் பிரபஞ்ச அபாவரூபம்" என்று செல்லும் சூன்யவாதி பௌத்தமதத்தின் மீது சொன்ன தூஷணைகள் அத்வைத மதத்தின்மீதும் சுமருகின்றன. இத்யாதி காரணங்களால் அத்வைத மதம் பௌத்த மதமென்றும் அது ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்லவென்றும் சங்கராசாரியாரே ஒப்புக்கொண்டிருப்பதாய் அவருடைய வாக்யங்களிலிருந்து வெளியாகிறதென்கிறார் துவைதாசாரியாளான உத்தராதிமடம் ஸ்வாமிகள்.

---

குறிப்பு:— தமிழ், தெலுங்கு, பாளபந்து, கன்னடம் முதலியவைகளில் பிரசுரமாயிருக்கும் இதுசம்பந்தமான புஸ்தகத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பை அனுப்பி இனமாய் அடியிற்கண்ட விலாஸதாரரிடம் பெறலாம்:— மதராஸ் திருவல்லிக்கேணி, 13 நெ, சிங்கராசாரியார்தெரு S. ராமாசாரியார்.

அத்வைதமதம் பௌத்தமதமென்று பல மேநாட்டு கல்வி படைத்தவர்களும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அவைகளில் சிலவற்றை இங்கு பிரசுரிக்கின்றோம்:—

(1)

Thus it does not seem so passing strange that there should be striking similarities between Buddhism and Sankara seeing that the sources of their thought lie so near together.................But in view of all this what are we to say of the vehement opposition to Buddhism which we find in Sankara's own writings and particularly in the second section of the second chapter of his commentary on the Vedhanta Sutras?..............His language is that of the full blooded controversialist rather than of the abstracty intellectual reasoner.

W. S. Urquhart, M.A., D. Litt.

(2)

He (Sankara) has, I think, tried his level best to *explain away* even the most obvious references to Buddha and Buddhism in Gaudapada's Karika.

S. Das Gupta M.A., P.H.D.

(3)

That Gaudapada gives us a Vedantic adaptation of the Buddhist Sunyavada is supported by many scholars such as Jacobi, Poussin, Sukhtankar, and Vidusekhara Bhattacharya. Unfortunately Sankara ***explains away*** all obvious references to Buddhism.

Sir S. Radhakrishnan M.A., D. Litt.

---



அத்வைதமதம் மாறுவேடம் தரித்த பௌத்தமதம் அதாவது பிரச்சன்ன பௌத்தமதமென்று பிராசீனர்களான இதர மதாசாரியார்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அவர்களில் சில முக்யஸ்தர்களை குறிப்பிடுகின்றோம்.

யாதவப்ரகாசாசாரியார்.
ராமானுஜாசாரியார்
மத்வாசாரியார்
வேதாந்ததேசிகாசாரியார்
யாமுனாசாரியார்
விக்ஞானபிக்ஷு
வல்லபாசாரியார்
பாஸ்கராசரியார்

பாத்ம புராணம், வராஹபுராணம், பிருஹத்பிரம்ம ஸம்ஹிதை இவைகளிலும் பௌத்தமதமென்று அத்வைதமதம். நிராகரிக்கப்பட்டு மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் ஏற்றுக் கொள்ளத் தகுந்ததல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாய் பத்மபுராணத்தில் சொல்லப்பட்டிருப்பதை இங்குகூறுவோம்:— பத்மபுராணம் உத்தரகாண்டம் 263-வது அத்யாயம்.

பார்வதி:— பகவத்பக்தியில்லாத பிராம்மணர்கள் சொல்லியிருக்கும் தாமஸமான சாஸ்திரங்களை, ஹே பாபமில்லாதவரான தேவோத்தமா! எனக்குச் சொல்லும், அவைகளின் பெயரை கிரமமாய்ச்சொல்லும். பரமசிவன் சொன்னார்:— ஹே தேவி, கிரமமாய் அந்த தாமஸ சாஸ்திரங்களைச் சொல்லுகிறேன். கேள். அவைகளை ஸ்மரணம் செய்த மாத்திரத்தில் ஞானவான்களுக்குமே பாதித்யம் ஏற்படும். முதலில் நான் சைவம் பாசுபதம் முதலிய சாஸ்திரங்களைச் சொன்னேன். என்னுடைய சக்தியைக்கொண்ட பிராம்மணர்கள் அவைகளை சொல்லி வந்தனர். பிறகு வந்த சாஸ்திரங்களைக்கேள். கணாதனென்பவரால் பெரியதான வைசேஷிகமென்னும் சாஸ்திரம் சொல்லப்பட்டது. கௌதமரால் நியாயசாஸ்திரமும், கபிலரால் ஸாங்கிய சாஸ்திரமும். பிருஹஸ்பதியால் மகாநிந்திதமான சார்வாக சாஸ்திரமும், சொல்லப்பட்டது. அஸுரர்களை நாசம் செய்வதற்காக புத்தரூபியான விஷ்ணுவால் அஸத்தான நக்னம் நீலபடம் முதலான பௌத்த சாஸ்திரம் சொல்லப்பட்டது. கலியுகத்தில் ஜனங்களை எல்லாம் மயக்குவதற்

காக பிரச்சன்ன பௌத்தமாகிய அஸத்தான மாயாவாதத்தை சொல்லப்போகிறேன். கலியுகத்தில் பிராம்மண உருவங்கொண்டு அது என்னாலேயே சொல்லப்படுகிறது. வேதவாக்யங்களுக்கு எல்லோரும் நிந்திக்ககூடியதான தப்பான அர்த்தத்தை சொல்லிக்காட்டி அவைதிகமான சாஸ்திரத்தை என் மாயையால் வேதார்த்தம்போல் காட்டி ஜகத்தை நாசம்செய்வதற்காக என்னால் ஹே தேவி அது ரக்ஷிக்கப்படப்போகிறது. இந்த சாஸ்திரத்தில் கர்மத்தையே விடவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. ஜீவேசுவரர்களுக்கு ஐக்யமும், எல்லா கர்மங்களினின்றும் பரிப்ரம்சமும், தர்மமில்லாமையும் சொல்லப்படுகிறது. பிரம்மத்தின் சொரூபம் நிர்குணமென்று சொல்லப்படுகிறது. இதற்கு முன்னாடி ஜைமனியால் வேதத்திற்கு தப்பான அர்த்தமும், நிரீசுவரவாதத்தால் பெரிய சாஸ்திரமும் சொல்லப்பட்டது. ஹே பார்வதி, இந்த சாஸ்திரங்கள் தாமஸமானவைகளென்று அறிந்துகொள். இனி புராணங்களில் தாமஸமானவைகளை கிரமமாய்ச் சொல்கிறேன் கேள்.'' பிரஸித்தமான இந்த பாத்மபுராண வசனங்களை இப்பால் வந்த அத்வைதிகள் கல்பிதமென்று மறைக்க எத்தனிக்கின்றனர். சமீப காலத்தில் புராணங்களை அச்சிட்டுவரும் அத்வைதிகளான, புனா. ஆனந்தாசிரம காரியாலயாதிபதிகள் வேண்டுமென்று அத்வைதமதத்திலுள்ள அபிமானத்தால் ஒன்றிரண்டு சுலோகத்திற்கு வளைவுகொடுத்து ஒரு சில புஸ்தகங்களில் இவைக் காணப்படவில்லையென்று அறிவித்திருக்கின்றனராயினும் அநேக பிரதிகளில் இவை காணப்படுவதாய் அறிவித்திருப்பதை இவர்கள் கண்டுகொள்ளவில்லை. அந்த சுலோகங்களின் பாடமில்லாததான புஸ்தகங்கள் யாருடையதென்றும் எத்தனை வருஷத்திற்கு முன்பு எழுதப்பட்டதென்றும் காட்டப்படவில்லை. இந்தசுலோகங்களை ப்ராசீனர்களான விக்ஞான பிக்ஷு, விஜயீந்திரஸ்வாமிகள் முதலியோர் அவரவர்களின் நூலில் உதாஹரித்திருப்பதால் இதில் சற்றேனும் சந்தேகங்கொள்ள இடமுமில்லை. நூதனமான புஸ்தகத்தில் வளைவுகொடுத்திருப்பதை எடுத்தாலும் மீதியுள்ள சுலோகங்களும் அத்வைதமதம் தாமஸமென்றும் அவைதிகமென்றும் ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது.

## ஸ்ரீ மத்வமதகிரந்தங்கள்.

---

ஓர் மூழமூடன் தான் பண்டிதனென்று காட்டிக்கொள்ள எமது ஆசாரியாளின் மீதும் அவருடைய நூல்களின் மீதும் துச்சமான பலவகை



தூஷணைகளை சுமத்திவருகிறான். ஒருவன் தூஷணைகளை எடுத்துக்காட்ட அந்த கிரந்தங்களை அவன் நன்கு அறிந்திருக்கவேண்டும். பிரம்மஸூத்திராதிகளை இயற்றியவரும் மகாஞானிகளில் பிரதானருமான ஸ்ரீவேதவியாஸ பகவானிடம் பாடம் கற்று அவருடைய போதனாமுறையை பின்பற்றியவரான எமது ஆசாரியாள் பலவகை அர்த்தபுஷ்டிகள் கொண்டதாய் ஸூத்ரப்ராயமாயுள்ள வாக்கியங்களைக் கொண்ட தம்நூல்களில் சொல்லியுள்ளதை இவன் சற்றேனும் சரியாய் அறிந்திருக்கவில்லை என்று அவனுடைய துச்சமான கூற்றுகளே நன்கு அறிவிக்கின்றன. எமது ஆசாரியாளின் மூல கிரந்தங்களுக்கு வியாக்யானமாய் அவைகளின் அபிப்பிராயத்தை நன்கு விளக்க எமது மதத்திலுதித்த எண்ணிறைந்த பெரியோர்கள் எண்ணிறைந்த நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவைகளை நாம் அறிந்து கொண்டவரை எமது மித்திரன் வாசகர்களுக்கு அறிவிக்க வேண்டி தொடர்ந்து பிரசுரித்து வருவோம். இவைகளைத்தவிர்த்துள்ள நூல்களை அவைகளை இயற்றியவரின் பெயருடன் இதரர்கள் அறிவித்தாலும் அவைகளை பிரசுரிக்க சித்தமாயிருக்கின்றோம். ஸ்ரீமத்வாசாரியார் செய்த கிரந்தங்கள் மூலகிரந்தங்களென்றும் ஸ்ரீஜயதீர்த்தர் பத்மநாபதீர்த்தர் முதலியோர் வியாக்யானமாய் செய்துள்ள நூல்கள் டீகை என்றும் அந்த டீகைநூல்களுக்கு வியாக்யானமாய் ஸ்ரீராகவேந்திரர் முதலியோர் இயற்றியுள்ள நூல்கள் டிப்பணிகளென்றும் எமது ப்ராசீனர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது.

### ஸ்ரீ மத்வசாரியார் இயற்றியவை:—

1. தத்வஸங்கியானம்
2. தத்வவிவேகம்
3. மாயாவாதகண்டனம்
4. உபாதிகண்டனம்
5. மித்யாத்வானுமான கண்டனம்
6. விஷ்ணுதத்வ நிர்ணயம்
7. தத்வோத்யோதம்
8. கதாலக்ஷணம்
9. ப்ரமாணலக்ஷணம்
10. கர்மநிர்ணயம்

(இவை தசப்ரகரணங்கள்)

11. மாண்டூக உபநிஷத்பாஷியம்

21. கீதாபாஷியம்
22. பிரம்மசூத்திர பாஷியம்
23. ரிக்பாஷியம்
24. அணுபாஷியம்
25. அனுவ்யாக்யானம்
26 ஸன்யாயவிவரணம்
27. கீதாதாத்பரியம்
28. மகாபாரததாத்பரிய நிர்ணயம்
29. யமகபாரதம்
30. நம்ஸிம்ஹநகஸ்தோத்திரம்
31. த்வாதசஸ்தோத்திரம்

12. தலவகார உப. பாஷியம்
13. ஆதர்வண உப. பாஷியம்
14. காடக உப. பாஷியம்
15. ஷட்பிரசின உப. பாஷியம்
16. ஈசாவாஸ்ய உப. பாஷியம்
17. தைத்திரீய உப. பாஷியம்
18. சாந்தோக்ய உப. பாஷியம்
19. பிருஹதாரண்ய உப. பாஷியம்
20. ஐதரேய உப. பாஷியம்
(இவை தசோபநிஷத் பாஷியங்கள்)

32. ஸதாசாரஸ்மிருதி
33. கிருஷ்ணாமிர்த மகார்ணவம்
34. கிருஷ்ணஜயந்தீ கல்பம்
35. யதிப்ரணவ கல்பம்
36. பாகவத தாத்பரியம்
37. தந்திரசாரம்
(இவை மூலகிரந்தங்கள். கிரந்த ஸங்கியை 32,000)
38. கந்துகஸ்துதி

2. ஸ்ரீமத்வாசாரியாரின் சகோதரி கல்யாணிதேவி:—

38. கிருஷ்ணஸ்தோத்திரம் 39. அணுவாயுஸ்துதி 40. லகுதாரதம்யஸ்தோத்திரம்.

3. ஸ்ரீமத்வாசாரியாரின் ஸகோதரர் விஷ்ணுதீர்த்தர்:—

41. விஷ்ணுதீர்த்தீயம் (தர்மசாஸ்திரம்) (ஸுப்ரமண்யமடம்)

4. த்ரிவிக்ரம பண்டிதாசாரியார் :—

42, தத்வப்ரதீபம் (ஸூத்ர பாஷிய டீகை)
43. வாயுஸ்துதி
44. விஷ்ணுஸ்துதி
45. உஷாஹரணகாவியம்
46. மத்வாமிருதமகார்ணவம்
47. நரஸிம்ஹஸ்துதி

5. நாராயணபண்டிதாசாரியார் :—

48. நயசந்திரிகை (அனுவ்யாக்யானடிப்பணி)
49, தத்வநிர்ணய டீகை
50. யமகபாரத டீகை
51. கிருஷ்ணாமிர்தபாகார்ணவ டீகை
52. பாவதீபம்
53. சுபோதபம்
54. யோகதீபிகா
55. ப்ரமாணலக்ஷண டீகை
56. ஸங்கிரஹராமாணம்ய
57. மணிமஞ்சரி
58. மத்வவிஜயம்
59. அணுமத்வவிஜயம்
60. சிவஸ்துதி
61. பாரிஜாதஹரணம்
62. அம்சாம்சநிர்ணயம்
63. லகுதாரதம்யம்
64. மத்வமந்திரார்த்தமஞ்ஜரி
65. திதித்ரயநிர்ணயம்
66. அணுவாயுஸ்துதி

6. த்ரிவிக்ரம பண்டிதரின் தம்பி சங்கராசாரியார் :—

67. ஸம்பந்ததீபிகை (அனுவ்யாக்யான டீகை)

(தொடரும்.)



# மகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரெங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(பதின்மூன்றாவது அத்தியாயம்.)

(காபி ரைட்) முன் தொடர்ச்சி.

வசுதேவன் கேட்டுக்கொண்டதன்பேரில் ஸாத்தாளென்ற யாதவர்களுக்கு புரோஹிதரான கர்க்காசாரியார் நந்த கோகுலத்திற்குப் புறப்பட்டுப்போனார். அங்கிருந்த ஸ்ரீகிருஷ்ணர் பலராமர் இவர்களுக்கு க்ஷத்திரியர்களுக்கு தகுதியான ஜாதகர்மம் நாமகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களைச்செய்தார். கர்க்காசாரியார் நந்தகோபனைப்பார்த்து ஹே நந்தகோபா! உன் மகனான ஸ்ரீகிருஷ்ணன் எல்லா குணங்களாலும் விஷ்ணுக்கு குறைந்தவனன்று. இவனால் சம்ரக்ஷிக்கப்பட்டவர்களாய் நீங்கள் எல்லா கோபாலகர்களும் உத்கிருஷ்டமான ஸுகத்தை அடையப்போகின்றீர்கள். என்றிவ்வாறு கர்க்காசாரியார் சொல்ல நந்தகோபன் சந்தோஷமடைந்தான். கர்க்காசாரியார் அவருடைய இருப்பிடத்திற்குச்சென்றார். பிறகு ஆதிபுருஷனான ஸ்ரீகிருஷ்ணன் தமையனான பலராமனுடன் சேர்ந்து அங்குமிங்கும் சஞ்சரித்துக்கொண்டு அவருடைய காலடியால் கோகுல ப்ராந்தியத்தை புண்யபூமியாக்கினார். ஸர்வோத்தமனும் மகா ஸாமர்த்தியசாலியாயுமுள்ள ஸ்ரீகிருஷ்ணன் அவனை ஓர் சாமானிய குழந்தை என்று எண்ணியிருந்த அவருடைய தாயான யசோதைக்கு அந்த புத்தி நீங்குவதற்காக, அவருடைய வயதுள்ள பையன்கள் பார்த்திருக்கையில் ஒரு சமயம் மண்ணைத்தின்றார். அவர்கள் தாயிடம் இதை அறிவிக்க யசோதை கிருஷ்ணனை அதட்டவும் கிருஷ்ணன் “நான் மண்ணைத் திங்கவில்லையம்மா! வேண்டுமானால் என் வாயைப்பார்” என்று சொல்லிக்கொண்டு வாயைத் திறந்து காண்பித்தார். அப்பொழுது கிருஷ்ணனுடைய வாயில் ஜடப்ரகிருதி அதன் காரியமான மகத்தத்வாதிகள் இவைகளுடன் கூடிய ஜகத்தைக்கண்டாள். இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் நினைக்கமாளாததும் மகாலட்சுமி முதலியோராலும் அறிய மா

ளாததும் மேலானதுமான தன்னுடைய ஸ்வரூப ஸாமர்த்தியத்தை யசோதைக்கு காண்பிவித்து அவள் அவரை பகவானென்று அறிந்துகொண்டபின் அவருடைய பந்தக சக்தியால் அவள் கிருஷ்ணன் தன்னுடைய மகனென்ற சிநேகங்கொண்டவளாய் மீண்டும் செய்துவிட்டார். ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் இப்பேர்பட்ட விளையாட்டுகளால் உலகில் நடந்துவருவதுபோல் நடத்திக்காட்டிக்கொண்டு அநந்தமான ஆனந்தம் ஞானம் இவை பூர்ணனாய் கோகுலப்ராந்தியத்தில் நடமாடிவந்தார்.

## யமளார்ஜுனபங்கம்.

ஒருஸமயம் ஈசுவரனான கிருஷ்ணன் யசோதையின் ஸ்தனபானம் செய்யும்பொழுது அடுப்பின்மீது காய்ச்ச வைக்கப்பட்டிருந்த பால் பொங்கவே அதை இறக்கிவைக்க யசோதை கிருஷ்ணனை கீழே இறக்கிவிட்டுச்சென்றாள். உடனே கிருஷ்ணன் கோபமடைந்து வீட்டிலிருந்த தயிர் பானையை உடைத்தான். அந்த பானையில் தயிரைக்கடைந்து அதிகமாய் வந்திருந்ததான சந்திரமண்டலம் போல் ஒரே வெண்மையாயிருந்த வெண்ணை எல்லாவற்றையும் கண்ணன் எடுத்துக்கொண்டு தனியேபோய் தின்றான். இவ்வாறு அவர் நவநீத பக்ஷணாதிகளை ஏன் செய்தாரென்றால் அதற்கு காரணம் சொல்லப்படுகிறது. துஷ்டஜனங்களைக்கொல்பவரான ஸ்ரீகிருஷ்ணர் தேவர்கள் பூமியில் ஜனித்தால் அவர்கள் எந்த குலத்தில் எந்த யுகத்தில் எந்த வயதுடனிருக்கின்றனரோ அந்த குலம், அந்த யுகம் அந்தவயது இவைகளை அனுசரித்து காரியங்களைச்செய்யவேண்டுமென்ற உத்தமமானதாயும் தனக்கு ப்ரீதியைக்கொடுப்பதாயுமுள்ள தர்மத்தை வெளிப்படுத்துவதற்காக களவு முதலிய அதர்மத்திற்கு அக்னியைப்போல் நாசகராயிருப்பினும் அந்தந்த குலம் வயஸ் முதலியவைகளை அனுசரித்து வெண்ணையை திருடல் முதலியவைகளால் அனுகரணம் செய்கிறார். ராமர் கிருஷ்ணர் முதலிய மனுஷ்யரூபங்களென்ன, மத்ஸ்யம் கூர்மம் முதலிய ஜந்துக்களின் ரூபங்களென்ன ஹயக்ரீவர் நரஸிம்மம் முதலிய இதர ரூபங்களென்ன, இவைகளுள்ள பகவான் ஒரேமாதிரி இருப்பினும் பால்யம் யௌவனம் முதலிய அவஸ்தைகளைக்காட்டிக்கொண்டு அந்தந்தவயதுப்படி காரியங்



களைச் செய்கிறார். அந்த பகவான் வேதவ்யாஸர் பாசுராமர் முதலிய ப்ராம்மண ரூபம், ராமர் முதலான க்ஷத்திரிய ரூபம், கிருஷ்ணரென்னும் கோபாலக ரூபம் இவைகளை எடுக்கும்பொழுது அந்தந்த ரூபத்திற்கு உசிதமான காரியங்களை தேவர்களுக்கு கற்பிக்கவேண்டி செய்கிறார். ஆயினும் ப்ரபுவான பகவான் தன்னுடைய பலம் இதர தேவதைகளின் பலத்திற்கு ஸமானமானதன்று, அதிகமென்று காட்டிக்கொண்டு தன்னுடைய அப்ராகிருதமான ஞானானந்தாதி குணங்களை அடிக்கடி காண்பிவிக்கிறார். தயிர் பானையை உடைத்ததைக்கண்ட யசோதை கையில் பிரம்பை எடுத்துக்கொண்டுவர ஜகத்குருவான கிருஷ்ணன் அதைக்கண்டு பயந்து ஓடினான். யோகிகளின் மனதிற்கும் வெகு தூரனான கண்ணனைப் பிடிக்கவேண்டுமென பேதையான யசோதை ஓடித்துரத்தினாள். சிறந்த நடையுள்ள ப்ரபுவான பகவான் தன் தாய் சிரமப்படுவதைப்பார்த்து தான் தன்னுடைய பக்தர்களுக்கு அதீனனென்பதை அறிவிக்கும் நிமித்தம் அவள் கையில் சிக்கினான். நித்யமுக்தனான பகவானை நன்றாய்க்கட்டிப் போட யசோதை கையில் ஓர் கயிற்றை எடுத்தாள். அந்த கயிறு அவரைக்கட்டப்போதாமற்போயிற்று. ஊரிலுள்ள எல்லா கயிறுகளையும் ஒன்றுக்கொன்று சேர்த்து முடித்துக் கட்டியும் அது அளவற்ற சரீரங்கொண்டிருந்து குழந்தையைப்போல் காட்டிக்கொடுத்துவரும் கண்ணனைக்கட்ட போதாமலே ஆகிறது. எல்லா உலகையும் உதரத்தில் தரித்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணன் தான் இதரர்களால் கட்டுப்பட முடியாதவனென்பதை விளக்கிக்காட்டியபின் மகன் தாய்க்கு கட்டுப்பட வேண்டுமென்ற தர்மத்தை அறிவிக்க முடிவில் ஓர் சிறிய கன்றின் கண்ணியால் கட்டப்பட்டார். பிறகு ஸமர்த்தனான கிருஷ்ணன் ஆயிரம் தனுஸ்ஸு தூரத்திற்கும் உயர்ந்ததாயிருந்த குபேரனின் புத்ரர்களின் அம்சமான இரட்டை அர்ஜுன விருக்ஷங்களை ஒடித்தெறிந்தார். முன்பு துனி, சமு என்ற இரண்டு அஸுரர்கள் பூதனை, சகடாக்ஷாஸுரன் இவர்களுடன் சேர்ந்து பார்வதியைக்குறித்துத் தவம் செய்தனர். இந்த நான்கு பேருக்கும் பார்வதி நீங்கள் அவத்யர்களாவீர்களென்று வரமளித்தாள். இந்த நால்வர்களுக்கும் வரம் வந்தபின் திருணாவர்த்தாஸுரன் பார்வ

தியைக்குறித்து தவம் செய்து அவத்யமாயிருத்தலை அடையப் பெற்றான். பூதனை, சகடாசுரன், திரிணாவர்த்தாஸுரன் இம்மூவர்களும் சிசுரூபியான கிருஷ்ணனால் கொல்லப்பட்டு போயினர். தனி, சமூ இந்த இரண்டு அஸுரர்கள் இந்த இரட்டை அர்ஜுன விருக்ஷத்தில் நுழைந்திருந்தனர். கிருஷ்ணன் இந்த இரட்டை மரங்களை வேருடன் சாய்த்ததால் தனி சமூ இருவர்களும் கொல்லப்பட்டனர். இந்த இரண்டு மரங்களும் சாபத்தாலுண்டானவை. முன்பு நாரதர் தன்னுடைய சமீபத்தில் நிர்வாணமாய் மதோன்மத்தர்களாயிருந்த குபேரனின் குமாரர்களான நளகூபரன், மணிக்ரீவன் இவர்களை நீங்களிருவரும் சீக்கிரத்தில் இரட்டைமரங்களாய் பிறப்பெடுங்களென்று சாபங்கொடுத்தார். கிருஷ்ணனின் பிரஸாதத்தால் அவர்களிருவரும் சாபத்தாலேற்பட்ட விருக்ஷ சரீரத்தினின்றும் முக்தர்களாய் சொந்த தேவதா சரீரத்தை அடைந்தனர். ப்ரபுவான கிருஷ்ணனை ஸ்தோத்திரம்செய்து அவர்களின் இருப்பிடத்திற்குச்சென்றனர். கிருஷ்ணன் நளகூபரன் மணிக்ரீவன் இவர்களை நாரதரின் சாபத்தினின்றும் விடுவித்து அதனால் ஆச்சரியமடைந்த கோபாலகர்களால் பார்க்கப்பட்டார். பிருந்தாவனம் செல்ல விருப்பங்கொண்டு கிருஷ்ணர் அவருடைய உரோமக்கண்களினின்றும் பலத்தில் வேங்கைகளுக்கு சமானமான செந்நாய்களை சிருஷ்டித்தார். அநேக கோடிக்கணக்கான செந்நாய்கள் வந்து ஹிம்சிக்கவும் பிருஹத்வனத்திலிருந்தவர்களெல்லாம் அதை விட்டுவிட்டு நித்யானந்தனான நந்தகோபகுமாரனான கிருஷ்ணனை அழைத்துக்கொண்டு பிருந்தாவனம் சென்றார். லக்ஷ்மீநாயகனும் ஆனந்தபரிபூர்ணனுமான மகாப்ரபு ஸ்ரீகிருஷ்ணன் பிருந்தாவனத்தில் மிகவும் மேலானதான லீலைகளால் நந்தகோபாதிகளை சந்தோஷப்படுத்தினார்.

### வத்ஸாஸுரவதம்.

பூர்ண சந்திரனை பரிகசிக்கும் சுந்திரமான முகத்துடன் கூடியவனும் சந்திரன்போல் வெண்மையான பலராமனுடனும் கூடியவனுமான ஸ்ரீகிருஷ்ணன் கன்றுகளை மேய்க்கும் வத்ஸபாலனாய் ஆனான். அப்ரமேயனான கிருஷ்ணன் கன்று உருவத்துடன் வந்தவனும் கம்சனுடைய வேலையாளனும், ருத்திரனின் வரத்தால் இதரர்களால் கொல்லமுடியாதவனுமான வத்ஸாஸுரனை அவனுடைய பின் இரண்டுகால்களை பிடித்து விளாமரத்தின் நுனியில் விட்டெறிந்து ஸம்ஹாரம் செய்தார்.

(தொடரும்.)



## ஸ்ரீஜகந்நாததாஸர் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

இப்படிப்பாடிக்கொண்டு ஆனந்தஸமுத்திரத்தில் மூழ்கி ஸ்ரீரங்கநாதருடைய லாவண்யாம்ருதபானம் செய்துகொண்டு கண்ணை மூடிக்கொண்டே வீற்றிருக்க அன்றிரவு ஓர் க்ஷணம்போல் கழிந்தது. வனத்திலுள்ள பக்ஷி ஜாலங்களெல்லாம் சப்திக்கத் தொடங்கவே ஸ்ரீ தாஸர் கண்ணை விழித்துப்பார்க்கவும் அருணோதயமாகி ஸ்ரீரங்கநாதருடைய ரூபம் மறைந்துபோய் தான் வனத்திலேயே வீற்றிருப்பதைக் கண்டார். நேராக அங்கிருந்து ஸ்ரீரங்கம் வந்து ஸ்ரீரங்கநாதனை தரிசித்துக்கொண்டு அங்கு சில காலம் வசித்துவந்தார். ஸ்ரீரங்கநாதன் ப்ரத்யக்ஷமானதன் நிமித்தம் ஸ்ரீஜகந்நாத தாஸருக்கு ரங்கவலிததாஸரென்று பிரக்யாதி ஏற்பட்டது. பிறகு ஸ்ரீஜகந்நாததாஸர் அவ்வூரைவிட்டு கிரமமாய் தீர்த்தயாத்திரைகளை செய்துகொண்டு ஸ்ரீசுவேதவராகனை தரிசிக்க மைசூர் வந்தார். அங்கு அச்சமயம் அந்த ராஜதானியில் பூர்ணய்யா என்னும் மாத்வ ப்ரபு திவானாயிருந்தார். அபரோக்ஷ ஞானியாய் வித்வத்குல சிரோமணியான ஸ்ரீஜகந்நாத தாஸர் தமது நகருக்கு விஜயம் செய்வதை முன்னாடியே அறிந்து தாஸருக்கு விசேஷமான வரவேற்பு தரவேண்டுமென்று நிச்சயித்திருந்தார். ஸ்ரீஜகந்நாத தாஸர் தம்முடைய ஸ்வாமி பெட்டியடங்கிய கித்தான் பையைத் தோளில் போட்டுக்கொண்டு மைசூர் வந்து ஓர் வீட்டின் திண்ணையில் உட்கார்ந்தார். அந்நகருக்கு அவர் விஜயம்செய்த நாள் ஏகாதசி. தேஜ:புஞ்ஜராய் விளங்கிக்கொண்டு ஓர் ஹரிதாஸர் தன்னுடைய திண்ணையில் வீற்றிருப்பதைக்கண்டு அந்த வீட்டு யஜமானி ஓர் மாத்வ மாது வெளிவந்து தாஸர்வாளை ஸாஷ்டாங்கம் பணிந்து தன்னுடைய வீடு பாவனமாயிற்றென்றாள். ஸ்ரீதாஸர்வாள் புன்னகைக்காட்டி தான் ஸ்வாமி பூஜை செய்யவேண்டுமென்றும் அதற்கு சௌகரியங்களை செய்துகொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதைக்கேட்டவுடன் அந்த அம்மாள் கண்களிலிருந்து தாரை தாரையாய் ஜலத்தைப் பெருகவிட்டுக்கொண்டு "ஹே புண்ய

புருஷனே! நான் அத்தகைய நற்காரியங்களை செய்துகொடுக்க பாக்யமற்றவளாயிருக்கிறேன். நான் மகா பாபி, அபவித்ரமானவள். என் வீட்டில் தாங்கள் அடிவைத்தமாத்திரத்திலேயே மகாசுத்தரான தங்களுக்கும் பாபங்கள் வந்துசேரும். நான் பாதிவ்ரத்யத்தை இழந்திருக்கிறேன். நான் வ்யபிசாரி என்பது உலகப்பிரஸித்தமாயிருக்கிறது. ஆதலால் பெரியாராகிய தாங்கள் வேறிடத்தில் தங்கவேண்டியிருக்கு"மென்று மிகுந்த பச்சாதாபத்துடன் கருணைவரும்படி அறிவித்தாள். உடனே ஸ்ரீஜகந்நாததாஸர் சிறிது நேரம் யோசித்தார். இந்நகரில் ஆயிரக்கணக்கான ஸாதுக்களின் கிருகங்கள் சோபித்திருக்கையில் அந்த வியபிசாரியின் வீட்டில் தங்க நம்முடைய புத்தி ப்ரவிருதிப்பானேனென்று சிந்தித்தார். உடனே இவருடைய மனதில் தேவரகசியமொன்று உதித்தது. ஸ்ரீஜகந்நாததாஸர் மகிழ்ந்து தாம் செய்தது சரியேயென்று நிச்சயித்து "மாதே! பரவாயில்லை. இங்கு தங்கவேதான் நமக்கு ஸ்ரீஹரி ப்ரேரணை ஆகியிருக்கிறது. நாம் ஸ்நானம் செய்துவருகிறோம். இங்குதான் இன்று பூஜையும் நாளை பூஜையும் காலையில் த்வாதசி பாரணையும் நடக்கவேண்டு"மென்று அறிவித்தார். அந்த அம்மாள் மீண்டும் "ஸ்வாமின்! நான் தங்களுக்கு போஜனம் செய்விப்பதில் யாதொரு ஆக்ஷேபணையில்லை. பிறகு தங்களை இவ்வூரார் மதிக்கமாட்டார்கள். தங்கள்மீது பலவகை தூஷணைகளை சுமர்த்திவிடுவார்களென்றுதான் பயப்படுகிறேன். நான் அப்பேர்பட்ட துஷ்கிருத்யங்களைச் செய்தவள்" என்றாள். அதற்கு ஸ்ரீஜகந்நாததாஸர் "ஆம், நான் அதையெல்லாம் அறிந்துகொண்டேன். உனக்கு ஸத்கதி அளிக்கவேதான் நான் இங்கு தங்க நிச்சயம் செய்துகொண்டேன். இங்கு தங்குவதாலேயேதான் என்னிடம் ஜனங்களதிகமாய் மதிப்புக்கொள்ளப்போகிறார்கள். நீ கவலைப்படாதே" என்று ஸமாதானம் சொல்லி ஸ்நானத்திற்குச் சென்றார். அந்த அம்மாள் மகா சந்தோஷமடைந்து மிகுந்த பரபரப்புடன் வீட்டையெல்லாம் கழுவி கோலம் போட்டு சுத்தமாக்கி ஸ்வாமிபூஜைக்கு வேண்டிய ஸாமக்ரிகளைத் தயாரித்து ஸித்தமாய் வைத்தாள்.

(தொடரும்.)



## ஸ்ரீநாராயண பண்டிதாசாரியாரியற்றிய

# மணிமஞ்சரி.

(ஸ்ரீமு. வே. பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது.)

---

இரண்டாவது ஸர்க்கம் (முன் தொடர்ச்சி.)

(காபி ரைட்.)

அவளுடைய படுக்கையில் வசுதேவர் சிசுருபான ஸ்ரீகிருஷ்ணரை மெதுவாய் படுக்கவைத்தார். 20. யதுவம்சத்தவரான வசுதேவர் அங்கு அப்போது பிறந்து படுத்துக்கிடந்த துர்க்கையை எடுத்துக்கொண்டு தனது நகரமாகிய மதுரைக்குவந்தார். தனது பாரியாளான தேவகியின் படுக்கையில் படுக்கவைத்தார். முன்போல் விலங்குகளும் அடைப்புகளும் ஏற்பட்டன. 21. அப்பெண்குழந்தையை கம்ஸன் அந்தபிரஸவ கிருகத்தினின்றும் வெளியே கொண்டுவந்து கொல்ல எத்தனித்தான். அந்த துர்க்கை உடனே கம்ஸனின் கரத்தினின்றும் தப்பி "ஹேகம்ஸா! உன்னை கொல்பவன் பிறந்து விட்டான்" என்று சொல்லி விட்டு ஆகாயத்திற் பறந்துபோனாள். 22. அதைகேட்டு கம்ஸன் அப்போதே பிறந்திருக்கும் குழந்தைகளைக்கொல்ல தூதர்களை ஏவினான். அவர்கள் உலகில் எங்கும் குழந்தைகளைக்கொன்றனர். இதரர்களை ஹிம்சிப்பதே துஷ்டர்களின் விளையாட்டு. ஆதலால் அவர்கள் சிறிதேனும் சங்கோசமின்றி இவ்வாறு செய்தனர். 23. அப்படிச் செய்தவர்களைச் சேர்ந்தவள் பூதனை என்றவள். அவள் கம்ஸனை வளர்த்த தாதி. அந்த துஷ்டை நந்தகோகுலம் சென்றாள். அவள் அங்கிருந்த ஸ்ரீகிருஷ்ணருக்கு தனது முலையில் நிரப்பிய விஷப்பாலைக் கொடுத்து கொல்ல கையிலெடுத்தாள். ஸ்ரீஹரியான கிருஷ்ணரே அதை அவளுடைய பஞ்சபிராணத்துடன் உறிஞ்சி அவளைக் கொன்றார். 24. யசோதை கிருஷ்ணனை ஓர் பாரவண்டியின்கீழ் படுக்கவைத்திருந்தாள். ஸ்ரீகிருஷ்ணரைக் கொல்வதற்காக த்ரிணாவர்த்தனென்ற அசுரன் ஓர் சுழல் காற்றாக வந்து ஸ்ரீகிருஷ்ணரை ஆகாயத்திற்கு கொண்டுபோனான். பகவான் அவனுடைய கழுத்தைப்பிடித்து நெறித்து அவனை

கொன்றார். 25. வசுதேவர் சொல்லி கர்க்காசாரியரர் நந்தகோ
குலம் வந்து ஸ்ரீகிருஷ்ணருக்கும் பலராமருக்கும் க்ஷத்திரியர்
களுக்கு உசிதமான ஜாதகர்மம் நாமகரணம் முதலிய சம்ஸ்கா
ரங்களைச் செய்தார். 26. ரமாபதியான ஸ்ரீகிருஷ்ணர் குழந்தை
களுடன் தவழ்ந்து விளையாடினார். அவருடைய ஒவ்வொரு
லீலையிலும் ஒவ்வொரு தத்வம் அடங்கியிருந்தது. இருடைய
லீலைகளைக்கண்டு கோகுலத்திலுள்ளவர்கள் ஆனந்தப்பட்டுக்
கொண்டிருந்தனர். 27. உதாஹரணமாக ஓர் கதையைச்சொல்லு
கிறேன். ஒருசமயம் விளையாட்டாக ஸ்ரீகிருஷ்ணர் நடுத்தெருவி
லுள்ள மண்ணைத்தின்றார். இதைக்கேட்ட யசோதை ஸ்ரீகிருஷ்
ணரைத்திட்டி வாயைத்திறந்து காட்டச்சொன்னாள். பகவான்
அவ்வாறே காட்டினார். யசோதை அவருடைய வாயில் இந்த
சதுர்தசபுவனங்களையும் கண்டாள். ஸ்ரீகிருஷ்ணர் தான் ஜக
தீசுவரனென்றறிவித்தார். 28. ஒருசமயம் ஜகதீசுவரனான
ஸ்ரீகிருஷ்ணர் தயிர் பாண்டத்தை உடைத்து அதிலுள்ளே
இருந்த சந்திரனுக் கொப்பான வெண்ணையைக் கையிலெடுத்
துக்கொண்டு ஒதுப்புறமாய் உட்கார்ந்து தின்றார். 29. இதைக்
கண்டு தாயான யசோதை கோபமடைந்து ஸ்ரீகிருஷ்ணரை
உரலில் கட்டினாள். அவர் அதில் கட்டியபடியே அந்த உரலை
இழுத்துக்கொண்டுபோய் யமுனையின் கரையில் வளர்ந்திருந்த
இரண்டு அர்ஜுன விருக்ஷங்களின் நடுவில் அந்த உரலை சிக்
கச்செய்து வேகமாய் இழுக்கவும் பிரம்மாண்டமான அந்த
இரண்டு மரங்களும் சாய்ந்தன. அவ்வாறு விருக்ஷங்களாய்
பிறந்திருந்த நளகூபன் மணிக்ரீவன் என்றவர்களை அவர்களின்
விருக்ஷ ஜன்மாவினின்றும் விலக்கி சாபவிமோசனம் செய்தார்.
30. நந்தகோகுலம் விட்டு பிருந்தாவனம்போக ஸ்ரீகிருஷ்ணர்
எண்ணினார். அதற்காக பகவான் தன்னுடைய மயிர் கண்களி
னின்றும் வேங்கைகளுக்கொப்பான பலமுள்ள ஓனாய்களை சிருஷ்
டித்துவிட்டார். கோபாலகர்கள் பயந்துபோய் இனி கோகு
லத்திலிருந்தால் ஆபத்தென்றே எண்ணி பிருந்தாவனத்திற்கு
சென்றனர். 31. ஆதிதேவரான அந்த கிருஷ்ணர் இடையர்களின்
பையன்களுடன் மாடுகளையும் கன்றுகளையும் மேய்த்துவந்தார்.
அப்பொழுது இவரைக்கொல்ல கன்று உருவாய்வந்த வத்ஸாஸு
ரனையும் வாத்து உருவாய்வந்த பகாஸுரனையும் கொன்றார்.
பகவான் பிறகு மாடுகளை மேய்ப்பவராய் நியமிக்கப்பட்டார்.

மூன்றாவது ஸர்க்கம் முடிந்தது.

---

(தொடரும்.)



# வினாக்களுக்கு விடை.

---

கும்பகோணம் வாஜபேயயாஜி ஸ்ரீமவே காபே ஹயக்ரீவ தீக்ஷிதர்
எழுதுவதாவது:—

சென்றமாதத்திய அதாவது 7-வது நம்பர் மாத்வமித்திரனில் கேட்
கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு இந்த என் பதிலை பிரசுரிக்கக்கேட்டுக்
கொள்கிறேன். முதலாவது வினா ஓர் கர்மாதிகாரத்தைப்பற்றி இருக்கி
றது. இறந்தவர்களுக்கு புத்ரஸந்தானமில்லாமலிருப்பினும் பெண்களிருக்
கின்றனர். பெண்ணுக்கு கர்மாதிகாரம் எமது சாஸ்திரத்தில் சொல்லப்
பட்டிருக்கிறது. நிர்ணயஸிந்துவில் சிராத்தாதிகார நிர்ணய ப்ரகரணத்
தில் காணப்படுவதாவது:— "அபுத்ரஸ்யச யாபுத்ரீ ஸாபி பிண்டப்ர
தாபவேத்" புத்ரனில்லாதவனுக்கு சிராத்தம் செய்யவேண்டியவள் புத்ரி
என்று ஜாபாலி சொல்லியிருக்கிறார். ஏனென்றால் "பார்த்துர் தன
ஹராபத்னி தாம்வினா துஹிதாங்ருணும்" பர்த்தாவின் சொத்துக்கு
பாத்யமுள்ளவள் பாரியை, அவளில்லாவிடில் பெண்தான்; ஏனெனில்
மனுஷ்யனுடைய சரீரத்திலிருந்துதான் புத்ரனைப்போல் புத்ரியும் உண்
டானவள் என்று பிருஹஸ்பதியால் புத்ரிக்கு சொத்து பாத்தியம் சொல்
லப்பட்டிருக்கிறது; ஆகவே பத்னி இல்லாமலிருந்தால் இறந்தவனு
டைய அவிபக்தனான ஸஹோதரன் அதிகாரியாவான்; அவன் விபக்தனா
யிருந்தால் இறந்தவனுடைய பெண் அதிகாரி, அந்த பெண்களிலும்,
விவாகமானவள், விவாஹமாகாதவள், இருவர்களுமிருந்தால் விவாகமான
வள்தான் அதிகாரி "துஹிதாபுத்ரவத் குர்யாத் மாதா பித்ரோஸ்து
ஸம்ஸ்க்ருதா" தாய்தந்தையர்களுக்கு விவாகமான பெண்ணுக்கு புத்ரனைப்
போலத்தான் அதிகாரம், பெண் இல்லாவிடில் தௌஹித்ரனுக்கு உண்டு
என்று கண்டிருக்கிறது. இந்த அபிப்பிராயத்தைக்கொண்டுதான் சுருக்க
மாக தர்மஸிந்துவில் மூன்றாவது பரிச்சேதம் உத்தரார்த்தத்தில் 261-வது
பக்கத்தில் "பத்ன்யபாவே விபக்தா ஸம்ஸ்ருஷ்டஸ்ய கன்யா பிண்டதா
தனஹாரிணீச | தத்ராபி விவாஹிதைவ பிண்டதா தனஹாரா அனூ
டாபி"; சிரார்த்தாதிகாரமுண்டு என்றால் கார்மாதிகாரம் உண்டென்பது
எப்படியோவென்று சந்தேகிக்க இடமில்லை. அந்த அதிகாரத்தை அதி
தேசம் செய்யவேண்டும். விவாகமான பெண்ணுக்கு கர்மாதிகாரமிருப்
பதாய் தர்மஸிந்துவில் ஸ்திரீகளின் கர்மாதிகார ப்ரகரணத்தில் ஸ்பஷ்ட
மாய் இருக்கிறது. எப்படி என்றால்:— "ஊடாயா ஸ்திரியா: தத்

புத்ராபாவே ஸபத்னீபுத்ர:; தத்பாவே பதி:; தத்பாவே துஹிதா; தத்பாவே தௌஹித்ர:; தத்பாவே பத்யுர்ப்ராதா; விவாகமானவளுக்கு புத்திரனில்லாமலிருந்தால் அவளுடைய ஸபத்னீ புத்ரன் கர்மாதிகாரி; அவனில்லாமலிருந்தால் பௌத்ரன் ப்ரபௌத்ரன் இவர்கள்; இவர்கள் இல்லாவிடில் பர்த்தா; அவனில்லாவிடில் பெண்; அவளில்லாவிடில் தௌஹித்ரன்; அவனில்லாவிடில் பர்த்தாவின் ஸகோதரன் ஆதலால் வினவில் விவரித்திருக்கிற ஸந்தர்பத்தை யோசித்தால் இறந்தவளின் விவாகமான மூத்த பெண்ணுக்குத்தான் கர்மாதிகாரமென்று என் அபிப்பிராயம். பெண் இல்லாவிட்டால் இறந்தவளின் புருஷனுடைய ஸகோதரர்களுக்கு அதிகாரமேற்படலாம். தற்போதுள்ளவர்கள் விபக்தர்களான ஸபிண்டர்களான ஞாதிகளாதலால் அவர்களுக்கும் மாமியாருக்கும் கனிஷ்ட புத்ரிக்கும் தௌஹித்தரர்களுக்கும் அதிகாரமில்லை. பல பண்டிதர்களும் இவ்வாறே அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 24-3-32 | குருவாரம் | ஸ்ரீமத்வஸித்தாந்த விஜயதினம். ‡ |
| 25-3-32 | சுக்ரவாரம் | ஸ்ரீவாதிராஜர் புண்யதினம். |
| 26-3-32 | சனிவாரம் | ஸ்ரீவியாஸராஜர் புண்யதினம் |
| 1-4-32 | சுக்ரவாரம் | ஏகாதசி. |
| 2-4-32 | சனிவாரம் | த்வாதசி, ஹரிவாஸரம் 6-8 மணிவரை |
| 5-4-32 | மங்களவாரம் | அமாவாசை, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 6-4-32 | புதவாரம் | ஸம்வத்ஸராதி பண்டிகை. |
| 15-4-32 | சுக்ரவாரம் | ஸ்ரீராமநவமி. |
| 17-4-32 | பானுவாரம் | ஏகாதசி. |
| 20-4-32 | புதவாரம் | சித்ராபௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உபவாஸம், [ வைசாகஸ்நான ஆரம்பம். |

‡ சென்ற வருடத்தில் த்வைதமதத்திற்கும் அத்வைதமதத்திற்கும் கும்பகோணத்தில் சுமார் 1 மாதகாலம் முன் எச்சரிக்கையுடன் மகாயுத்தம் நடந்து முடிவில் அத்வைதமதம் பங்கமடைந்து ஸ்ரீமத்வஸித்தாந்தத்திற்கு மகத்தான விஜயம் ஏற்பட்டு பாரத நாடெங்கும் ஜயபேரி முழக்கம் ஏற்பட்ட நன்னாள் இதுவே. இதற்குமுன் பற்பல விஜயம் ஏற்பட்ட நாட்கள் சரியாய் குறிப்பிடமுடியாமலிருப்பதால் இந்நாளில் நாடெங்குமுள்ள மாத்வ ஸபைகளில் ஸ்ரீபகவத்பாதாளுக்கு மகோற்சவமும் மத்வஸித்தாந்த உபன்யாஸங்களும் பிரதி வருடமும் நடத்தப்பட வேண்டுமென்பது எமது பிரார்த்தனை. (ப—ர்)




## "மாத்வமித்திரன்" ஷீட் காலண்டர்.

சாமானியமான காலண்டர்களைப்போல் இதில் ஆங்கிலத்திலும் தமிழிலும், மாதம், நாள் இவைகளுடன் ஆங்கிலத் தேதிகள் குறிப்பிடுவதுடன் அந்தந்த மாதத்திய மத்வ ஸம்பிரதாயப்படி மாஸம், ருது, அயனம், மகாஸ்வாமிகளின் புண்யதினம், ஏகாதசி, சிரவணம், விஷ்ணு பஞ்சகம், ஷஷ்டி, கிருத்திகை முதலியவைகளின் உபவாஸ தினங்கள், உபவாஸ நிர்ணயம், பண்டிகை தினங்கள், விரதகல்பாதிகள் முதலிய அநேக சாஸ்திரீய விருத்தாந்தங்கள் பிரசுரிக்கப்படும். விசேஷமாய் சிராத்தாதிகளுக்கு திதியை அறிந்துகொள்ள முடியாமல் சர்மணியர்கள் வருந்துகிறார்களாதலால் ஒவ்வொரு தேதியிலும் சிரார்த்தத்திற்குறிய இன்ன திதி என்பதை சாஸ்திர விமரிசை பூர்வமாய் குறிப்பிடப்படும். மாத்வர்களுக்கு மிக்க தேவையான இத்தகைய அபூர்வமான காலண்டர் ஒவ்வொரு மத்வரின் வீட்டிலுமிருத்தல் மிகவும் அவசியம். Foolscap 12 ஷீட் கொண்ட இந்த "மாத்வமித்திரன்" காலண்டரின் விலை அணா 1. பைசா 6. மாத்வமித்திரன் சந்தாதாரர்களுக்கு மட்டில் 1 அணா. தபாற்கூலி பைசா 6. வேறு. காலண்டர்கள் அச்சாகி முடிந்தவுடன் புக்போஸ்ட் மூலமாய் அனுப்பப்படும், சொற்ப காபிகள்தான் அச்சிடப்படுவதால் உடனே உங்கள் சரியான விலாசத்துடன் தபாற் பில்லைகளை அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

**V. ஸ்ரீனிவாஸராவ்,**
ஸ்ரீவெங்கடேஸ்வர பிரிண்டிங் ஒர்க்ஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.


---

## மதிப்புரை.

### ஸ்ரீமுஷ்ணம் மகாத்மியம்.

ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருப்பதி, ஸாலக்ராம க்ஷேத்திரம், நைமிசாரண்யம், தோதாத்ரி, புஷ்கரம், பதரிகாசிரமம் ஆகிய எட்டு ஸ்வயம் வ்யக்த மகா க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய ஸ்ரீமுஷ்ணம் க்ஷேத்திரத்தின் மகாமகாத்மியம் ஸ்ரீ நாரதீய புராணத்திலும் ஸ்ரீவராஹ புராணத்திலும் வெகு விஸ்

தாரமாய் பல இதிஹாஸங்களுடன் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை நல்ல காகிதத்தில் பிழையின்றி தேவநாகர லிபியில் ஸ்ரீஉபயவே ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீசைலதாதாசாரியார் என்கிற தாத தேசிகாசாரியார் அச்சிட்டு பிரசுரம் செய்திருக்கிறார். அத்துடன் பிரம்மாண்ட புராணத்திலுள்ள வராஹஸ்தோத்திரமும் ஸ்காந்த புராணத்திலுள்ள வராககவசமும் தனிப்புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. வராஹ புராணத்திலுள்ளதை அச்சிட்டிருக்கும் இரண்டாம் பாகத்தில் காசிகண்டத்திலுள்ள தக்ஷ சங்கர ஸம்வாதத்திலடங்கிய வேணுதீர்த்தப்ரசம்ஸையாகிய எழுபத்திலொன்றாவது அத்யாயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் மத்வ விஜயத்தில் கூறியபடி வாயுபகவான் ஸ்ரீமத்வாசாரியாராய் அவதரித்து துச்சாஸ்திரங்களைக் கண்டித்ததும், ஸ்ரீவேதவியாஸரை ஸந்தரிசித்ததும், தீர்த்தயாத்ராக்ரமமாய் இந்த க்ஷேத்திரம் வந்து தண்ட தீர்த்தமென்னும் புண்யகரமான தீர்த்தத்தை நிர்மாணம் செய்ததும், மாகசுத்தநவமியன்று அங்கு ஸ்நானம் செய்பவர்களுக்கு ஸ்ரீவராஹமூர்த்தி திவ்ய வரன்களை யளித்ததுமாகிய அபூர்வ சரிதை சொல்லப்பட்டிருக்கிறது. மகா ஐசுவரியம், பாண்டித்யம், பக்தி முதலியவைகளை அளிக்கும் ஸ்ரீவராஹமூர்த்தியின் மகாத்மியங்களை ஆஸ்திகர்களான நம்மவர்கள் எப்போதும் சிரவண படனாதிகளைச்செய்து ஸகல ஸௌபாக்யங்களைப் பெறுவார்களாக. நாரதீய புராணத்திலடங்கிய 12 அத்யாயங்களுடனுள்ள முதற் பாகம் 12 அணா; வராஹபுராணத்திலடங்கிய 10 அத்யாயம் 2-வது பாகம் 12 அணா; வராககவசம் ஸ்தோத்திரம் அணா 2. தபாற்கூலி வேறு. புத்தகம் கிடைக்குமிடம்:—

T. N. தாததேசிகாசாரியார்,
ஸ்ரீமுஷ்ணம் போஸ்ட், (Via) சிதம்பரம்.

---

பிழை திருத்தம்.

சென்றமாதத்திய சஞ்சிகையில் 222-வது பக்கத்தில் 22-வது வரியிலுள்ள (ஜீவப்ரம்ம அபேதம்தான்,) என்பதை ஜீவப்ரம்ம பேதம்தான் என்று வாசிக்கவும். (ப—ர்)

20867)


மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வ மதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை !!

சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கநாதாசாரியார் ஆசிரியர்) 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் 0—4—0
சக்குபாய் ஷை 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India

# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

| | |
|---|---|
| ஸ்தாபிதம் | தந்திவிலாஸம் |
| 1909 | "கோகுல்" |

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள். |

சந்தனாதித்தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்

கேட்லாக்குக்கு எழுதுங்கள்

Printed at Sri Venkateswar Printing works and
Published by Bhagavatha Ranganthachariar, Kumbakonam.